வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 05.02.2022 சனிக்கிழமை | இதழ் : 62 | பக்கங்கள் : 16




## 74ஆவது சுதந்திரநாளில்

# போராட்டங்களால் அதிர்ந்தது வடக்கு!

### புலம்பெயர் தேசங்களிலும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 05

நாட்டின் 74ஆவது சுதந்திர தினத்தை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி வடக்கு மாகாணம் முழுவதும் போராட்டங்கள் இடம்பெற்றன. கிழக்கின் திருகோண மலையிலும் போராட்டம் முன்னெ டுக்கப்பட்டது. 15

## நாடளாவிய ரீதியில் நேற்று சுதந்திர தின கொண்டாட்டம்

கொழும்பு,பெப். 05

நாட்டின் 74ஆவது சுதந்திர தினம் நேற்று கோட்டாபய ராஜபக்ஷ தேசியக் கொடியை ஏற்றி - உரையாற்றி சுதந்திர தினக் கொண் டாட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

சவால்களை முறியடித்து வளமான தாய்நாடு என்ற தொனிப்பொருளில் சுதந் திர சதுக்கத்தில் இடம்பெற்ற இந்த நிகழ் வில் பங்கேற்க சென்ற ஜனாதிபதியை நீர்ப்பாசன அமைச்சு உள்நாட்டு அலுவல், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷ வரவேற்றார்.

இந்த நிகழ்வில் பிரதமர் மஹிந்த 15



74ஆவது சுதந்திர தினமான நேற்று காலை ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தேசியக் கொடியை ஏற்றிவைத்தபோது...!

## நிறைவுக்கு வந்தது மீனவர் போராட்டம்!

வடமராட்சி, பெப். 05

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித் தும் இரு மீனவர்களின் மரணத்துக்கு நீதி கோரி யும் வடமராட்சி பருத்தித் துறை சுப்பர்மடம் மீன வர்கள் கடந்த ஐந்து நாட் களாக முன்னெடுத்த போராட்டம் நேற்று மாலையுடன் நிறைவுக்கு வந்தது.

இந்திய மீனவர்களின் இழுவைப் படகு வத்திரா யன் கடற்பரப்பில் ஒரு படகை மோதியதில் இரு மீனவர்கள் உயிரிழந்தனர் என்று குற்றஞ்சாட் டப்படுகின்றது. இந்தச் சம்பவத் 15

## சுதந்திர தின நிகழ்வை புறக்கணித்தது எதிரணி

கொழும்பு, பெப். 05

ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தலைமை யில் நடைபெற்ற தேசிய சுதந்திர தின நிகழ்வை பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்துள்ளது.

நாடு பெரும் நெருக் கடியை எதிர்கொண் டுள்ள நிலையில், பெரு மெடுப்பில் சுதந்திர தினம் எதற்கு என்பது உட்பட மேலும் சில காரணங்களாலேயே அந்தக் கட்சி இந்த முடிவை எடுத்துள் ளது. 15

## இந்திய மீனவர் அத்துமீறலுக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு!

யாழ்ப்பாணம், பெப். 05

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதி ராக உச்ச நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ள தாக பாராளுமன்ற உறுப் பினர் எம்.ஏ. சுமந்திரன் மீனவர்கள் மத்தியில் தெரிவித்தார்.

வடமராட்சி மீனவர் கள் ஐந்தாவது நாளாக நேற்றும் தமது போராட் டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டம் நடைபெற்ற 15

## வாழ்வுரிமைக்கே எமது போராட்டம் தமிழக உறவுகளுக்கு எதிரானதல்ல!

### மீனவர் சமூகம் அறிக்கை

வடமராட்சி, பெப். 05

“எமது போராட்டம் எமது வாழ்வுரிமையை பாது காப்பதற்கே. இது தமிழக உறவுகளுக்கு எதிரானதல்ல.”, என்று கடந்த ஐந்து நாட்களாக இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து போராட்டம் நடத்திய பருத் தித்துறை சுப்பர்மடம் மீனவர் சமுதாய அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண் டித்து நடத்தப்பட்ட போராட்டம் நேற்று மாலை 15

## கூட்டமைப்பு அரசியல்வாதிகள் குருந்தூர்மலையில் வழிபாடு!

முல்லைத்தீவு, பெப். 05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப் பினர்களான எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், இரா. சாணக் கியன் மற்றும் அரசியல்வாதிகள், பற்றாளர்கள் நேற்று குருந்தூர்மலைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு - குமுழமுனை - குருந்தூர்மலை சிவன் ஆலயப் பகுதியை பௌத்த விகாரை தலமாக பிரகடனப் படுத்திய தொல்பொருள் திணைக்களம் அங்கு விகாரை யையும் அமைத்து வருகின்றது.

இந்த நிலையில், அங்குள்ள பிக்கு ஒருவர் தொல் பொருள் திணைக்களம், படையினரின் ஆதரவு 15

## தொற்று பலி 29ஆக உயர்வு

கொழும்பு, பெப். 05

கொரோனா தொற் றால் நேற்று முன்தினம் மட்டும் 29 பேர் உயிரி ழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று அறிவித் தார்.

இதன்படி, 30 -59 வயது பிரிவில் 3 ஆண் கள் ஒரு பெண் அடங்க லாக நால்வரும், 60 15

## வீதியில் போராடுவதற்கு நீதிமன்றம் தடை கடலில் இறங்கிய சுப்பர்மடம் மீனவர்கள்!

### கறுப்புக் கொடிகளை ஏந்தி நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 05

பருத்தித்துறை சுப்பர் மடம் மீனவர்கள் நேற்று கடலில் இறங்கிக் கறுப் புக்கொடிப் போராட்டத் தில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை நீதி மன்றத்தால் வீதி மறியல் போராட் டத்துக்கு தடை 15



## இப்படியும் நடக்கிறது...!

ஒரு தடவை நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்த போது, அப்போதைய முக்கிய பிரச்னை ஒன்றை எப்படித் தீர்ப்பது என்று எனக்குத் தெரிந்த யோசனை ஒன்றை அவரிடம் சொன்னேன்.

அவர் ஒரு முக்கிய அதிகாரி. அவருக்கு நான் சொன்ன யோசனை பிடித்துப்போயிருக்க வேண்டும். அவர் ஆர்வ மிகுதியில் விளக்கமாக என்னிடம் என் யோசனை பற்றிக் கேட்டார்.

எல்லாவற்றையும் கேட்டு முடித்த பின்னர் அவர் சொன்னார், “நல்ல யோசனை ஐசே. ஆனால், என்னட்டைச் சொன்னமாதிரி வேற யாரிட்டையும் சொல்லிப்போடாதேயும், பிறகு அவங்கள் அதைத் தங்கடை யோசனை மாதிரி சம்பந்தப்பட்ட தரப்பிடம் சொல்லி பெயரெடுக்கப் பார்ப்பான்கள். நீர் இப்படி ஏதாவது யோசனை வந்தால் அதை உம்மட முகநூலிலை எண்டாலும் பதிவுசெய்து வைக்கவேணும்.”

சில நாட்களுக்கு முன்னர், நமது தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆறு தலைவர்கள் ஒன்றாக ஊடகவியலாளர் மாநாடு நடத்தியிருந்தனர்.

இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதிய அந்த கட்சிகளின் தலைவர்களின் அந்த சந்திப்பு முடிந்த பின்னர், இந்தக் கடித விவகாரத்தை நடத்தி முடித்த ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனை தனிப்பட்ட முறையில் சந்தித்து, இந்த ஊர்க்குருவி அவருக்கு பாராட்டுத் தெரிவிக்கத் தவறவில்லை.

சரி, பிழைக்கு அப்பால், இப்படியொரு முயற்சியை - மற்றவர்கள் சொல்வதுபோல அது யாரின் பின்னணியில் நடந்திருந்தாலும் - அரசமைப்பில் இருக்கின்ற ஒரு சிறிய அதிகாரத்தையாவது தக்கவைக்கவேண்டும் என்ற எமது நினைப்பிற்கு வலுச்சேர்க்கின்ற அந்த காரியத்தை செய்து முடித்தவர் என்பதால் அவரைப் பாராட்ட வேண்டும்போல இருந்தது, பாராட்டினேன்.

இல்லாத பட்டுவேட்டிக்கு ஆசைப்பட்டு இருக்கின்ற கோவணத்தை கைவிட்டது போல என்று நமது பழமொழி ஒன்று சொல்வதுபோல, மாகாண சபைகளையும் விட்டு விடக்கூடாது என்று நினைப்பவர்களில் இந்த ஊர்க்குருவியும் ஒருவர். இது ஒரு சாமான்யனின் ஆசை, அவ்வளவு தான். அதற்காக இந்த ஊர்க்குருவியையும் இந்திய அடிவருடி “லிஸ்ட்“டில் நீங்கள் சேர்த்தால் அதற்கு நான் ஒன்றும் செய்யமுடியாது.

இப்போது அவரைப் பாராட்டியதல்ல விசயம். அப்படி பாராட்டியபோது, அவர் நன்றி தெரிவித்துவிட்டு, அடுத்து இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதை வலியுறுத்தி சர்வதேச நாடுகளின் கதவைத் தட்டுவதற்கு - அது தொடர்பாக தமிழ் கட்சிகளை ஓரணியில் திரட்டி, சர்வதேச அழுத்தத்தை நாடுகின்ற முயற்சியைத் தொடங்கப்போவதாகத் தெரிவித்திருந்தார்.

“நல்லது. அதுவும் இன்று அவசியமான ஒன்றுதான். தொடங்குங்கள் உங்கள் முயற்சியை” என்று ஊர்க்குருவி அவரை உற்சாகப்படுத்தியிருந்தது.

இந்த பயங்கரவாத தடைச் சட்டம் இந்த நாட்டில் யுத்தம் ஒன்று நடந்துகொண்டிருந்தபோது, அதனை முறியடிப்பதற்காக கொண்டுவரப்பட்ட ஒன்று. இன்று யுத்தம் முடிந்து பன்னிரண்டு வருடங்களின் பின்னரும் அது அப்படியே நடைமுறையில் இருக்கின்றது. குறிப்பாக, சிறுபான்மையினருக்கு எதிராக இந்த சட்டம் இப்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அதனை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை, ஐரோப்பிய ஒன்றியமும் ஜி. எஸ். பி. சலுகையை தொடர்வதற்கு நிபந்தனையாக முன்வைத்திருக்கின்றது. இந்நிலையில், இதனை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை பலமாக முன்வைக்கவேண்டிய தேவை ஒன்றும் சிறுபன்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு உண்டு. அதற்காக அனைத்து சிறுபான்மையின கட்சிகளையும் ஓரணியில் திரட்ட ரெலோ திட்டமிட்டுக்கொண்டிருக்க, திடீரென்று தமிழ் அரசுக் கட்சியின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் முல்லைத்தீவில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக்கோரும் கோரிக்கை மனுவில் பொதுமக்களிடம் கையெழுத்துப் பெறும் முயற்சி ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

அதுவும் கூட்டமைப்பின் பெயரிலேயே தொடங்கப்பட்டது. வழக்கம்போல பங்காளிக் கட்சிகளுக்கு தெரிவிக்கப்படாமலே அந்த முயற்சியை தமிழ் அரசின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடக்கியுள்ளனர்.

ரெலோ இப்படியொரு முயற்சியை செய்யவிருப்பதை அறிந்துகொண்டு, தாங்கள் முந்தினார்களா என்பது தெரியவில்லை.

அது அவர்களுக்கு தெரியாமலே இருந்திருந்தாலும்கூட, ரெலோ செய்ய நினைத்ததுபோல, அனைத்துக் கட்சிகளையும் இந்த விடயத்தில் ஒன்றுதிரட்டி அதனைச் செய்திருந்தால், அது இன்னமும் பலம்பெற்ற ஒன்றாக இருந்திருக்கும்!

**- ஊர்க்குருவி**

# அத்தியாவசிய பொருள் இறக்குமதிக்கு மாதாந்தம் டொலர்களை விடுவியுங்கள்

### ஜனாதிபதியின் செயலரிடம் இறக்குமதியாளர்கள் கோரிக்கை

கொழும்பு, பெப். 05

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதிக்கு மாதாந்தம் 175முதல் 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விடுவிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி செயலாளர் காமினி செனரத்தை சந்தித்து, இறக்குமதியாளர்கள் கோரியுள்ளனர்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, நாட்டில் ஏற்படவுள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான பற்றாக் குறையைத் தவிர்ப்பதற்காக இந்த கோரிக்கையை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

துறைமுகத்தில் சிக்கியுள்ள சுமார் 1,500 கொள்கலன்களின் பல்வேறு பொருட்களை இறக்குமதி செய்வதற்கு செலுத்தப்படவேண்டிய அமெரிக்க டொலர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவி ரத்ன தெரிவித்தார். எவ்வாறாயினும் நாட்டில் தற்போது அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு இல்லை என்றும் அவர் கூறினார்.

எனினும் சர்வதேச கம்பனிகளுக்கு செலுத்துவதற்கு அந்நிய செலாவணி கிடைக்கப்பெறாவிட்டால் அது இலங்கை வர்த்தகர்களின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்யும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## மேலும் 440 பேர் பூரண குணம்

கொழும்பு, பெப். 05

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மேலும் 440 பேர் பூரணமாக குணமடைந்த வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய, கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 580,220 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, நாட்டில் இது வரை கொவிட் தொற்றுக்கு உள் ளானவர்களின் எண்ணிக்கை 614, 659 ஆக அதிகரித்துள்ளது. (அ)

## ‘யாவர்க்கும் நலம்’ கருத்தமர்வு இன்று

யாழ்ப்பாணம், பெப். 05

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு பிரதி சனிக்கிழமைகளில் நடத்தும் ‘யாவர்க்கும் நலம்’ மெய்நிகர் வழி நிகழ்வில் இன்று சனிக்கிழமை ‘சருமம் மற்றும் கேசப் பராமரிப்பு’ எனும் தலைப்பில் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.

இன்றிரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெறவுள்ள இந்தக் கருத்தமர்வில் பங்கேற்க விரும்புவோர் சூம் செயலி மூலம் 899 8528 2023 என்ற அடையாள எண் மூலம் 354485 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பூஸ்டர் தடுப்பூசியை பெற்ற யாரும் உயிரிழக்கவில்லை!

கொழும்பு, பெப். 05

ஜனவரி முதலாம்திகதி தொடக்கம் இதுவரையில் கொழும்பு மாநகரத்திற்குள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்க ளில் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்கள் எவரும் உயிரிழக் கவில்லை என்று கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி ரூவான் விஜேயமுனி ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயத்தை குறிப்பிட்டார். இதுவரை தடுப்பூசி மருந்தை பெற்றுக்கொள்ளாத வர்கள் விரைவாக அதனை பெற்றுக்கொள்ளுமாறு இதன்போது அவர் வலியுறுத்தினார். (அ)

## சுதந்திர தினத்தை முன்னிட்டு படையினருக்கு பதவி உயர்வு!

கொழும்பு, பெப். 05

74 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு விமானப் படையை சேர்ந்த 175 அதிகாரிகளுக்கும் மற்றும் 2,338 சிப் பாய்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலை உயர்வுகள் தேசிய சுதந்திர தினமான நேற்று முதல் அமுலுக்கு வருவதாக விமானப் படை பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, தாய் நாட்டுக்காக இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ள அர்ப்பணிப்பு சேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் தேசத்தின் 74 ஆவது தேசிய சுதந்திர தினத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அனு மதியுடன் பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியும் இரா ணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவினால் 480 அதிகாரிகள் மற்றும் 8,034 சிப்பாய்களுக்கான நிலை உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, 7 சிரேஷ்ட பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல் நிலைக்கும், 16 கேணல்கள் பிரிகேடியர் நிலைக்கும், 36 லெப்டினன் கேணல்கள் கேணல் நிலைக்கும், 50 மேஜர்கள் லெப்டினன்ட் கேணல் நிலைக் கும் 207 கப்டன்கள் மேஜர் நிலைக்கும், 94 லெப்டினன்ட் கள் கப்டன் நிலைக்கும், 70 இரண்டாம் லெப்டினன்ட்கள் லெப்டினன்ட் நிலைக் கும் நிலை உயர்த்தப்பட்டுள்ளனர். (அ)

## கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுக்கு சென்றார் பேராயர் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, பெப்.05

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள தேவாலய ஊழியரை சந்திப்பதற்காக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுக்கு நேற்று சென்றார்.

சந்தேகநபரின் உடல்நிலை குறித்து விசாரிப்பதற்காக பேராயர் இந்த விஜயத்தை மேற்கொண்டார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுக்கு சென்ற அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிப்பதை தவிர்த்து சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, பெப். 05

கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மகப்பேறு மருத்துவர் வைத்தியர் சனத் லெனரோல் இது குறித்து தெரிவிக்கையில்-

கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது, அதே நேரத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

எனவே, இந்த காய்ச்சலுடன் 4-5 நாட்கள் வீட்டிலேயே இருந்தால், நோய் தீவிர நிலைக்கு செல்ல வாய்ப்புள்ளது.

சந்தேகத்திற்கிடமான அறிகுறிகளைக் கொண்ட கர்ப்பிணிப் பெண்கள் தங்கள் பகுதியில் உள்ள மருத்துவரை அணுகி ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

Eelanadu ஈழநாடு
05.02.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், தை 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## தனிப் பயணங்களால் பயனில்லை?

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினம் நேற்றைய தினம் கொண்டாடப்பட்டது. தமிழ்த் தேசிய தரப்புக்கள் வழமைபோல் இதனை கரிநாளாக நினைவு கூர்ந்திருக்கின்றன. ஆனால், இம்முறை எதிர்க்கட்சியினர் சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்குகொள்ளவில்லை. சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், கூட்டமைப்பினர் குருந்தூர்மலைக்கு கவனவீர்ப்பு பயணமொன்றை மேற்கொண்டிருந்தனரென செய்திகள் வெளியாகியிருக்கின்றன. கூட்டமைப்பின் பயணமென்று கூறப்பட்டாலும் கூட, அதில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் எவரையும் காணவில்லை. தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சிறிதரன் ஆகியோர் மட்டுமே பங்குகொண்டிருக்கின்றனர்.

குருந்தூர்மலையில் புத்தர் சிலை நிறுவும் விடயத்தை தமிழர்கள் எதிர்த்த போதும் அதனை தடுத்து நிறுத்த முடியவில்லை. இதே போன்று பல உதாரணங்கள் இருக்கின்றன. திருகோணமலை கன்னியா வெந்நீருற்று விடயத்திலும் இதே விடயமே நடந்தது. ஆர்ப்பாட்டமாக பல விடயங்கள் பேசப்பட்டன. ஆனால், இறுதியில் அங்கு வழிபாடுகளை மேற்கொள்ள முடியவில்லை. நீதிமன்ற தடையுத்தரவு இருந்தபோதிலும்கூட, விடயங்களை தடுக்க முடியவில்லை. பௌத்த விரிவாக்கல் என்னும் கொள்கையில் அரசாங்கம் மிகவும் உறுதியாக இருக்கின்றது. உண்மையில் புத்தர் சிலை வைப்பதல்ல இங்கு விடயம். புத்தர் சிலை என்னும் பெயரில் சிங்கள நில விரிவாக்கமே நடந்து கொண்டிருக்கின்றது. இதனை தடுத்து நிறுத்துவது எப்படி? இதற்கான பதில் எவரிடமும் இல்லை.

ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தை இலக்கு வைத்து செயல்பட்ட சிங்கள விரிவாக்கல் பிரிவு, இப்போது, வடக்கு மாகாணத்தின் பக்கம் திரும்பியிருக்கின்றது. இதன் முதல் கட்டமாகவே, தொல்பொருள் ஆராய்ச்சி என்னும் பெயரில் தொன்மைகளை அடையாளப்படுத்தும் முயற்சியில் சிங்கள நிர்வாகம் செயல்பட்டு வருகின்றது. அவர்கள் பௌத்த தொன்மைகளை மட்டுமே தேடுகின்றனர் என்பதுதான் விடயம். ஒரு காலத்தில் தமிழ் பௌத்தம் இருந்ததால், அவர்கள் தேடும் பௌத்த தொன்மை கிடைக்கலாம். ஆனால், அவைகள் சிங்களவர்களுக்குரியதல்ல.

இதனை தடுப்பதற்கான ஒரு சரியான பொறிமுறை தமிழர்களிடத்தில் இல்லை. மாகாண சபை தேர்தலும் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் சிங்கள நிர்வாகத்தை தடுத்து நிறுத்துவதற்கான எந்தவொரு நிர்வாகரீதியான பலமும் தமிழர்களிடத்தில் இல்லை. இந்த நிலையில் தமிழ் தேசிய தரப்புக்கள் தனி ஓட்டத்தில் ஈடுபடுவதால் எவ்வித பயனுமில்லை.

தனி ஓட்டங்கள் தேர்தல் அரசியலுக்கு பயன்படுமே தவிர, பிரச்னையை எதிர்கொள்ள பயன்படாது. நில ஆக்கிரமிப்பில் முட்டுக்கட்டைகளை போடுவதற்கான ஒன்றிணைந்த தமிழ்த் தேசிய வேலைத் திட்டமொன்று தேவை. இந்த விடயத்தை ஆராய்வதற்காக முதலில் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

# இந்தியா - வடக்கு தொடர்புகளை துண்டிக்க முயலும் சக்திகள் குறித்து விழிப்படைய வேண்டிய தருணம்!

அலசுவது இராஜதந்திரி



இந்திய மீனவர்கள் இலங்கையின் வடகடல் பகுதிக்குள் ஊடுருவி கடல் வளத்தை சுரண்டுவது தொடர் பாக வடபகுதி மீனவர்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டு ஆத்திரமடைந்துள்ளனர் என்பதை வெளிக் காட்டுவதாக மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நோக்கி மீனவ சமூகத்தினர் கூச்சலிட்டு குழப்பமடைய வைத்த சம்பவம் விளங்குகின்றது. இரு தினங் களுக்கு முன்னர், பாதிக்கப்பட்ட மீனவர்களை அமைச்சர் தேவானந்தா சந்திக்கச்சென்றபோது இச்சம்பவம் நிகழ்ந்திருந்தது. இதுதவிர, வடக்கே அரசாங்க செயலகங்களையும் மீனவ சமூகத்தினர் முற்றுகையிட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

அண்மைக்காலங்களில் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுவதையும் இது விடயத்தில் இந்திய கடலோர காவல்படை பாராமுகமாக இருக்கின்ற அதேசமயம், இலங்கை கடற்படையினரும் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுவது குறித்து தம்மால் உத்தரவாதமளிக்க முடியாதென ஒரு வேடிக்கையான கருத்தை கூறியுள்ளனர்.

புவியியல் ரீதியாக நோக்கும் போது இலங்கையின் அயல் நாடாக இந்தியா இருக்கின்றபோதிலும் இலங்கையின் வடபகுதியே இந்தியாவுக்கு மிக அண்மையில் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இந்திய மற்றும் இலங்கையின் வடபகுதி மீனவர்களின் பிரச்னை தற்போது வலுவடைந்துள்ள நிலையில் இந்தப் பிரச்னை குறித்து இந்திய ஊடகங்கள் பல்வேறு கோணங்களில் அலசி ஆராய ஆரம்பித்துள்ளன.

இந்திய ஊடகங்களின் அலசல்களை நோக்கும்போது வடகடல் மீன்வளத்தில் சீனா கூடுதல் அக்கறை காட்டுகின்றதெனவும் இதன் மூலம் இலங்கையின் வடக்கே இந்திய மீனவர்களுக்கும் இலங்கையின் வட பகுதி மீனவர்களுக்கும் இடையேயான மோதல்கள் மூலம், சீனா இலங்கை அரசின் துணையோடு “எரிகிற வீட்டில் பிடுங்குவது இலாபம்“ என்ற போக்கில் நடந்து கொள்ள முடியும் எனவும் கருத்து கண்ணோட்டங்கள் இந்திய பத்திரிகைகள் சிலவற்றில் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் தமிழ்நாடு மாநில அரசைப் பொறுத்தவரை மீனவ சமூகம் மாநில அரசியல் விவகாரங்களில் குறிப்பாக தேர்தல்களைப் பொறுத்தவரை தவிர்க்க முடியாத சக்தியாகவே இருந்து வருகின்றது.

இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவடைந்து வடபகுதி மீனவர்கள் கடல் தொழிலை விரிவாக்க ஆரம்பித்த காலம் முதல் இந்திய மீனவர்களுடனான மோதல் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. பல தடவைகள் தமிழக அரசுக்கும் இந்திய மத்திய அரசுக்கும் வடகடலில் இந்திய - இலங்கை மீனவர்களுக்கு இடையிலான பிரச்னைகள் குறித்து இராஜதந்திர மட்டத்திலும் அரசியல் மட்டத்திலும் பேச்சுக்கள் இடம்பெற்றுமிருந்தன. அத்துடன் சில வருடங்களுக்கு முன்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீன்பிடித்துறை அமைச்சராக இருப்பதற்கு முன்னர் கச்சதீவு உற்சவத்தின்போது இந்திய - இலங்கை மீனவர்களை சந்திக்க வைத்து அவர்களுக்கு இடையிலான பிரச்னைகள் குறித்து பேச வைத்திருந்தார்.


இந்திய பத்திரிகையொன்று வடக்கு - கிழக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியல்வாதிகளின் நோக்கங்களை நாடிபிடித்தறிந்து வேடிக்கையான முறையிலும் கருத்து விட்டுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசியல்வாதிகள் குறிப்பாக, வடபகுதியைச் சேர்ந்தவர்கள், தமிழ்த் தேசியம், சமஷ்டி அமைப்பு என்பவை குறித்தே தமது அரசியல் நலன்களை பாதுகாக்கும் விதத்தில் பேசிவருவதோடு இந்தியாவை பகைக்கக்கூடாது என்பதாலும் இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்னையில் ‘நுனிப்புல் மேயந்த’ போக்கையே பின்பற்றி வருகின்றனர் எனத்தெரிவித்துள்ளது.

இதேவேளை அண்மையில் இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென் ஹொங் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார். அங்கே கடல் அட்டை பிடிக்கும் தொழிலை மேம்படுத்த சீனா உதவ முடியும் எனவும் சீன தூதுவர் குறிப்பிட்டிருந்தார். ஏனெனில், சீனாவில் கடல் அட்டை ஒரு பிரபலமான உணவுப் பண்டமாகும்.

இத்தகைய பலதரப்பட்ட பின்னணியில் இலங்கையின் வடபகுதி மீனவர்களுக்கும், இந்திய மீனவர்களுக்கும் இடையிலான பிரச்னைகளை நீடிக்க விடுவதன் மூலம் வடபகுதி மக்களுக்கும், தமிழகத்துக்கும் இடையே ஒரு புரிந்துணர்வற்ற தன்மையை ஏற்படுத்தி எதிர்காலத்தில் அரசியல் ரீதியாகக் கூட தமிழகத்துக்கும் வடபகுதி மக்களுக்குமிடையே சர்ச்சைகளை ஏற்படுத்தும் திரைமறைவு முயற்சிகளின் ஓர் அங்கமாகவும் இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினையை கருதவேண்டியுள்ளதென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்நிலையில் வடபகுதி மற்றும் இந்திய மீனவர்கள் பிரச்னை தமிழகத்துடனான நெருங்கிய உறவுகளை பாதிக்காத்திருப்பதையும், இந்தியா வடக்கு - கிழக்கு மக்கள் தொடர்பாக எடுக்கின்ற நகர்வுகளை திசைதிருப்பாதிருப்பதையும் உறுதி செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
வெளியிடங்களில் மற்றவர்களின் பாராட்டை பெறுவீர்கள். உறவினர்கள் மூலம் அரசாங்கத்தின் உதவிகள் தேடி வரும். நீண்ட நாள் பிரச்சனை ஒன்று இன்று முடிவுக்கு வரும்.

**இடபம்**
குழந்தைகளால் பெருமிதம் உண்டாகும். மகிழ்ச்சி கூடும். மற்றவர்களுக்கு தீங்கு செய்யாமல் இருப்பது நல்லது. இன்று மன உளைச்சல் நீங்கி நிம்மதி அடைவீர்கள்.

**மிதுனம்**
நீண்ட நாளாக எதிர்பார்த்த உதவிக்கான வாய்ப்பு இன்று வரும். வேலை தேடுபவர்களுக்கு வெளியூரில் இருந்து வாய்ப்பு வரும். வருமானம் அதிகரிக்கும். நீண்ட நாளாக இருந்த பயம் தீரும்.

**கடகம்**
செலவுகளை சமாளிக்க கடன் வாங்க வேண்டாம். குடும்பத்தினரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணியாளர்களுக்கு பேச்சில் நிதானமும், செயலில் கவனமும் தேவை.

**சிம்மம்**
கணவன் மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். நீண்ட நாளாக மனதில் இருந்து வந்த கவலை குறையும் நம்பிக்கையை அதிகரிக்கும்படியான சம்பவங்கள் நிகழும்.

**கன்னி**
குழந்தைகளின் செயல்பாடுகள் உங்களுக்கு நிம்மதி தரும். மருத்துவ செலவு செய்ய நேரிடும். இருந்தாலும் அதை சமாளிப்பீர்கள். இதுவரை இருந்து வந்த அலைச்சல், மனஅழுத்தம் தீரும்.

**துலாம்**
குடும்பத்தில் பொருளாதார நிலை அமோகமாக இருக்கும். நிதி நெருக்கடி நீங்கும். பேச்சினால் சிரமம் வராமல் கவனம் தேவை. சுபநிகழ்ச்சி பற்றிய முயற்சிகளில் சிந்தித்து செயல்படுவது நல்லது.

**விருட்சிகம்**
உறவினர்கள் வழியில் அனுகூலம் உண்டாகும். பண வரவு அதிகரிக்கும். நண்பர் சந்திப்பு சந்தோஷம் தரும். பயணத்தால் நன்மை ஏற்படும். பலகாலத் தடை ஒன்று நீங்கும்.

**தனுசு**
நீங்கள் பல காலமாக ஆசைப்பட்ட பொருள் வீடு வந்து சேரும். பொருளாதாரம் சார்ந்த விஷயங்களில் கவனத்துடன் செயல்படுவீர்கள். வந்த வாய்ப்பை நழுவ விடாமல் பிடித்துக்கொள்ளுங்கள்.

**மகரம்**
இன்று பெரிய அளவிலான முதலீடுகள் செய்வதை தவிர்க்கவும். பணியிடத்தில் பொறுப்பாக செயல்பட்டு பரிசும், பாராட்டும் பெறுவீர்கள். அரசாங்க வகையில் ஆதாயம் கிடைக்கும்..

**கும்பம்**
புதிய முயற்சிகளில் கவனத்துடன் ஈடுபடுவது நல்லது. மனமும், உடலும் ஆரோக்கியமாக இருக்கும். தந்தை உதவி செய்வார். உணவு விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது.

**மீனம்**
சோர்வுடன் உள்ளதாக நீங்களாக கற்பனை செய்து கொள்ள வேண்டாம். இன்று வளமான நாளாக அமையும். பொறுமை தேவை. கூடுதலாக உழைத்து பாராட்டு, பரிசுகளை பெறுவீர்கள்.

# ஆளுநரின் முடிவை ஏற்று நீட் தேர்வு பயிற்சி மையங்களை உடனே தொடங்க வேண்டும்

## வானதி சீனிவாசன் வலியுறுத்தல்

கோவை, பெப் 05.

ஆளுநரின் முடிவை ஏற்று, நீட் தேர்வு பயிற்சி மையங்களை தமிழக அரசு உடனே தொடங்க வேண்டும் என பா. ஜ. க. மகளிரணி தேசியத் தலை வரும், எம். எல்.ஏயுமான வானதி சீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நீட் தேர்விலிருந்து தமிழகத்துக்கு நிரந்த விலக்கு அளிப்பதற்கான, தமிழக அரசின் சட்டத்தை, ஆளுநர் திருப்பி அனுப்பியிருக்கிறார். ஆளுநரின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது. நீட் தேர்வு



என்பதே, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவால், திமுக அங்கம் வகித்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தேர்வால் கிராமப்புற மாணவர்களும், ஏழைகளும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகவே, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தனி இட ஒதுக்கீடு அளிக்குமாறு, பா.ஜ.க. தேசியத் தலைவர் ஜெ.பி.நட்டா, மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தபோது தமிழக அரசுக்கு ஆலோசனை வழங்கினார்.

எனவே, நீட் தேர்வில் அதிகமான தமிழக மாணவர்கள், தமிழ் வழி மாணவர்கள், கிராமப்புற, ஏழை மாணவர்கள் வெற்றிபெற தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க வேண்டும். நீட் தேர்வு பயிற்சி வகுப்புகளை உடனடியாக தமிழக அரசு தொடங்க வேண்டும்" என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீட் மசோதாவை மீண்டும் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பிவைக்க வேண்டும்

## அரசுக்கு வைகோ யோசனை



சென்னை, பெப் 05,

தமிழக அரசின் நீட் விலக்கு சட்ட மசோதாவை ஆளுநர் ஆர்என் ரவி திருப்பி அனுப்பியது ஏற்கத்தக்கது அல்ல. ஆகையால், மீண்டும் சட்டப்பேரவையைக் கூட்டி நீட் மசோதாவை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்புமாறு அரசுக்கு மதிமுக பொதுச்செயலாளர் வைகோ யோசனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

"தமிழக சட்டப்பேரவை நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு சட்ட முன்வடிவுக்கு அரசியல் சட்டப் பிரிவு 200ன் படி மாநில ஆளுநர் ஒப்புதல் அளித்தாக வேண்டும். ஆளுநர் திருப்பி அனுப்பினால் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 201ன் படி மாநில சட்டப் பேரவை ஆளுநருக்கு பரிசீலனை செய்யுமாறு மீண்டும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பலாம். அவ்வாறு மீண்டும் ஆளுநருக்கு சட்ட முன்வரைவு அனுப்பப்பட்டால், அதனை குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு ஆளுநர் அனுப்பியே ஆகவேண்டும்.

எனவே தமிழக அரசு மீண்டும் சட்டப்பேரவை சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, நீட் தேர்விலிருந்து விலக்கு பெறும் சட்ட முன்வரைவை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்திட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு வைகோ தெரிவித்துள்ளார்

# அம்மாவின் ஆட்சியை நிச்சயமாக தமிழகத்தில் கொண்டு வருவோம்

## சசிகலா உறுதி

சென்னை, பெப் 03,

அம்மாவின் ஆட்சியை நிச்சயமாக தமிழகத்தில் கொண்டுவருவோம் என சசிகலா தெரிவித்துள்ளார்.

பேரறிஞர் அண்ணாவின் 53வது நினைவு நாளையொட்டி தி.நகரில் உள்ள இல்லத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த அண்ணவின் உருவப் படத்துக்கு சசிகலா மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின், பேசிய அவர், அண்ணாவின் கொள்கைகளை மக்களுக்கு கொண்டு செல்ல இயக்கத்தை தொடங்கினர் எம்ஜிஆர்., அண்ணவின் வழியில், புரட்சித் தலைவர் வழியில் நாங்கள் தொடர்ந்து பயணிப்போம். என்றார்.

அம்மாவின் ஆட்சியை நிச்சயம் தமிழகத்தில் கொண்டு வருவோம். யார் இருந்தால் நன்றாக இருக்கும் என்பதை கடந்த 8 மாதத்தில், மக்கள் புரிந்து கொண்டு இருப்பார்கள்.

நிச்சயம் அனைவரையும் அரவணைத்து செல்வோம். எடுத்தோம், கவிழ்த்தோம் என செயல்படக்கூடாது. கொரோ



னாக் காலகட்டம் என்பதால் மக்களை சந்திக்க முடியவில்லை. தற்போது உள்ளாட்சி தேர்தல் நடைபெறுகிறது. இதன் பின்னர் விரைவில் மாவட்ட வாரியாக சுற்றுப்பயணம் செய்து மக்களை சந்திக்க உள்ளேன் என்றார்.

# மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்

## ஓ பன்னீர்செல்வம் அறிக்கை

சென்னை, பெப் 05.

இந்திய அரசுக்கு தேவையான அழுத்தத்தைக் கொடுத்து, வரும் கல்வியாண்டிலாவது நீட் தேர்வை ரத்து செய்யத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அ.தி. மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தி.மு.க. ஆட்சி அமையும் போது 'நீட்' தேர்வு ரத்து செய்யப்படும். பொதுத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் மருத்துவம் படிக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும். இது உறுதி. 8 மாதங்கள் பொறுத்திருங்கள். விடியல் பிறக்கும்" என்று சட்டமன்ற தேர்தலுக்கு முன் மு.க.ஸ்டாலின் கூறினார். ஆனால், கடந்த ஆண்டு செப்ரெம்பர் 13ம் தேதி தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி விட்டு, திமுக மௌனமாக இருந்தது .

எனவே, "தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், முதலமைச்சர் இதில் கவனம் செலுத்தி, மத்திய அரசுக்கு தேவையான அழுத்தத்தைக் கொடுத்து, வரும் கல்வியாண்டிலாவது நீட் தேர்வினை ரத்து செய்யத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அ.தி.மு.க. சார்பில் கேட்டுக்கொள்கிறேன்." என்று தனது அறிக்கையில் ஓபிஎஸ் வலியுறுத்தியுள்ளார்.





# சுதந்திர தின வைபவத்தில் மயங்கியவர்களால் பரபரப்பு!

வவுனியா, பெப். 05

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற சுதந்திர தின வைபவத்தில் கலந்துகொண்டிருந்த பலர் மயக்கமடைந்தமையால் பரபரப்பு ஏற்பட்டது.

நாட்டின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வு வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று காலை கோலாகலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து அணிவகுப்பில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த மாணவர்கள் மற்றும் ஊரகாவற்படை வீரர்கள் உட்பட இருபதுக்கும் மேற்பட்டோர் திடீர் என மயக்கமடைந்து விழுந்தனர். இதனால் குறித்த நிகழ்வில் பரபரப்பு ஏற்பட்டது.

அதிக நேரம் வெயிலில் நின்றமையால் அவர்கள் மயக்கமடைந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. உடனடியாக அவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சைகள் வழங் கப்பட்ட பின்னர் நிகழ்வு தொடர்ந்து இடம்பெற்றது. (அ)

# நாட்டின் சகல பிரஜைகளுக்கும் பொருளாதார சுதந்திரம் மறுப்பு

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



**கொழும்பு, பெப். 05**

**நாட்டின் சகல பிரஜைகளுக்கும் பொருளாதார சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வறுமையின்றி வாழ்வாதாரத்தை முன்னெடுத்து செல்வதற்கான சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவு பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு மக்களுக்கு பாரிய பிரச்னை ஏற்பட்டுள்ளது. நாட்டின் தன்னிறைவு மற்றும் இறைமைக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

டொலருக்காக ஏனைய நாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் தோற்கடித்து ஒரு தலைமையின் கீழ் பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

# கட்சித் தலைவர்களின் விசேட கூட்டம் பெப். 7

கொழும்பு, பெப். 05

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சித் தலைவர்களின் விசேட கூட்டமொன்று எதிர்வரும் 07 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய பாராளுமன்றக் கூட்டத்தை நடத்துவது மற்றும் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரல் தொடர்பாக ஆராய்வதற்கே கட்சித் தலைவர்கள் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றக் கூட்டத் தொடர் எதிர்வரும் 08 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாணந்துறை ஆதார வைத்தியசாலை அம்புலன் சாரதிக்கு விளக்கமறியல்

கொழும்பு, பெப். 05

பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு முன் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய அம்புலன்ஸ் சாரதி மற்றும் துப்பாக்கிச் சூட்டை மேற்கொள்ள வந்த சந்தேகநபர்கள் இருவரில் ஒருவரையும் ஏழு நாட்களுக்கு தடுத்து வைத்து விசாரிக்க பாணந்துறை பதில் நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு நேற்று முன்தினம் இரவு இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட மற்றைய சந்தேக நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதன்படி களுத்துறை வடக்கில் வசிக்கும் அம்புலன்ஸ் சாரதி மற்றும் பாணந்துறை மலமுல்ல பிரதேசத்தில் வசிக்கும் மோட்டார் சைக்கிளை செலுத்திய சாரதி ஆகியோருக்கு இவ்வாறு தடுப்பு காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# பல்கலை அனுமதி வெட்டுப்புள்ளி மறு ஆய்வுக்குப் பின்னர் வெளியீடு

கொழும்பு, பெப். 05

2020 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், 2020/2021 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் மறுசீரமைக்கப்பட்டு மீள வெளியிடப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் https://admission.ugc.ac.lk/selection/ என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அவை கிடைக்கின்றன.

இம்முறை சுமார் 40 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

மறு ஆய்வுக்குப் பின் மீண்டும் வெளியான வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் மேலும் பலர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறுவார்கள் என்று கூறப்படுகிறது. (அ)

# மாவைக்கு கொரோனா

யாழ்ப்பாணம், பெப். 05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜாவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தன்னுடன் நெருங்கிப்பழகியவர்களை அவதானத்துடன் செயல்படுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)



# ரயிலில் இருந்து விழுந்த பிரான்ஸ் நாட்டு பெண்

கொழும்பு, பெப். 05

பதுளை - கொழும்பு ரயிலில் இருந்து பிரான்ஸ் நாட்டு பெண்மணியொருவர் கீழே விழுந்து, ஆபத்தான நிலையில், தியத்தலாவை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்விபத்து ஒகியவுக்கும் இதல்கஸ்ஹின்னவுக்கும் இடைப்பட்ட பகுதிலேயே நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி சென்றுகொண்டிருந்த ரயிலிலேயே, மேற்படி பிரான்ஸ் நாட்டுப் பெண் மிதிபலகையூடாக கீழே விழுந்துள்ளார். இப் பெண்ணை காப்பாற்ற முயன்றவரும் ரயிலிலிருந்து கீழே விழுந்துள்ளார். இவரும் தியத்தலாவை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# திருநெல்வேலி சந்தைக்கு செல்வோரிடம் வழிப்பறியில் ஈடுபட்ட ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், பெப். 05

கோப்பாய் பகுதியை சேர்ந்த இருவர் காலையில் திருநெல்வேலி சந்தைக்கு வருவோரை இலக்கு வைத்து கோப்பாய் - இராச பாதை வீதியில் வழிப்பறியில் ஈடுபட்டு வந்த நிலையில் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர்கள் இராச பாதை வீதியில் உள்ள தோட்ட வெளியில் ஆள்நடமாட்டம் அற்ற பகுதிகளில் நின்று காலை வேளையில் திருநெல்வேலி சந்தைக்கு மரக்கறி வாங்க செல்வோர் மற்றும் மரக்கறி கொண்டு செல்வோரை இலக்கு வைத்து, பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசி உள்ளிட்டவற்றை வழிப்பறி செய்து வந்துள்ளனர்.

வழிப்பறிச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் முறையிட்ட நிலையில் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொறுப்பதிகாரி வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட சந்தேகத்தில் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் மற்றைய நபரை கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# உள்நாட்டு பொறிமுறையில் எந்த தீர்வுமே கிடைக்காது!

## கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.



முல்லைத்தீவு, பெப். 05

**உள்நாட்டு பொறிமுறையில் ஒரு தீர்வும் கிடைக்காது என காலாகாலமாக நாம் கூறி வருகிறோம். ஆனபடியால் அந்த கேள்விக்கே இடமில்லை என தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

இலங்கையின் சுதந்திர தினமான நேற்று தமது மத உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் தொடரும் நில ஆக்கிரமிப்பு தொடர்பாகவும் எதிப்பை காண்பிக்கும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலைக்கான கவனயீர்ப்பு விஜயம் ஒன்று இடம்பெற்றது.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று குறித்த கவனயீப்பு நடவடிக்கையில் பங்கெடுக்குமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் நேற்று காலை பாராளுமன்ற உறுப்பினர்களான எம் ஏ சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன் உள்ளிட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் சமூக ஆர்வலர்கள் என சுமார் 75 பேர் வரையில் கலந்துகொண்டனர்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (அ)



# வவுனியா நகர சபை மைதானத்தில் நேற்று தேசிய சுதந்திரதின நிகழ்வு!

வவுனியா, பெப். 05

இலங்கை நாட்டின் 74 ஆவது சுதந்திரதின நிகழ்வு வவு னியா நகரசபை மைதானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட அரசாங்க அதிபர் சரத் சந்திர தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமாகிய கு.திலீபன் கலந்து கொண்டு தேசியக்கொடியை ஏற்றினார்.

அத்தோடு பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்பு மற்றும் பொலிஸ், சிவில் பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றிருந்ததோடு மூவினத்தினவர்களின் கலாசார நடனங்களும் இடம்பெற்றன. சுதந்திர நிகழ்வில் சிங்கள மாணவர்களினால் தமிழ் மூலமும், தமிழ் மாணவர்களினால் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# சுதந்திர தினத்தை முன்னிட்டு மன்னாரில் மரக்கன்று நடுகை

மன்னார், பெப். 05

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நாகாவத்த தலைமையில் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி, தாரா புரம் கோரைக்குளம் பகுதியில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்று வெள்ளிக் கிழமை காலை இடம்பெற்றது.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகே , மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் ஜெயதிலக மற்றும் மன்னார் பொலிஸார் இணைந்து குறித்த பகுதியில் 100 மரக்கன்றுகளை நட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் அரச அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டதோடு பிரதேச செயலாளர்கள் மற்றும் திணைக் களத் தலைவர்களும் சுதந்திர தினத்தை முன்னிட்டு மரக் கன்றுகளை நாட்டி வைத்தனர். (அ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 05

வீரவில சந்திக்கு அருகில் சந்தேகநபர் ஒருவர் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட பொலிஸாரின் விசேட சுற்றிவளைப்பின் போது, சட்டவிரோமான முறையில் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட குறித்த துப்பாக்கி 0.38 மில்லிமீற்றர் ரக ரிவோல்வரொன்றென பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வீரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இந்தியாவுக்கு செல்கிறார் அமைச்சர் ஜி.எல். பீரிஸ்

கொழும்பு, பெப். 05

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அவர் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 8ஆம் திகதிவரை இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வெளிவிவகார அமைச்சராக ஜி.எல்.பீரிஸ் கடந்த 2021 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். (அ)



# வவுனியாவில் திடீரென தீப்பற்றி எரிந்த பழக்கடை

வவுனியா, பெப். 05

வவுனியாவில் திடீரென பழங்கடை ஒன்று தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று முன் தினம் இரவு 9.30 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா-குருமன்காடு சாந்தி பகுதியில் உள்ள பழக்கடை ஒன்றே இவ்வாறு தீ பிடித்து எரிந்துள்ளது.

பழ வியாபார நிலையம் தீ பிடித்து எரிவதை அவதானித்த அயலவர்கள் வவுனியா நகர சபை தீயணைப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதுடன் வியாபார நிலைய உரிமையாளருக்கும் தெரியப்படுத்தினர்.

வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினர் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு தீயை கட்டுக்குள் கொண்டு வந்தபோதும் பழ வியாபார நிலையம் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், பழங்களும் தீயில் கருகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஜே.வி.பியின் தலைவரை கொலை செய்ய சூழ்ச்சி!

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 05

"ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை படுகொலை செய்வதற்கும், அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியை அழிப்பதற்கும் முயற்சி எடுக்கப்பட்டுவருகின்றது. இந்த விடயத்தை மிகவும் பொறுப்புடனேயே குறிப்பிடுகின்றேன்." - என்று ஜே.வி.பியின் பிரசார செய லாளரான விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளதென்பதையே முட்டை வீச்சு தாக்குதல் சம்பவமும் எடுத்துக்காட்டுகின்றது. அதனால்தான் அவர் செல்லும் இடங்கள் இலக்கு வைக்கப்படுகின்றன.

குறிப்பாக அநுரகுமார திஸாநாயக்கவை கொலை செய்வதற்கும், அவர் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியலை அழிப்பதற்குமான தேவை மேற்படி எதிராளிகள் குழுவுக்கு உள்ளது. இந்த தகவலை பொறுப்புடன் தான் நான் கூறுகின்றேன்.

இந்த அச்சுறுத்தலை தடுப்பதற்கு எம்மால் முன்னெடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைளையும் நாம் மேற்கொள்வோம். அநுரவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த வேண்டாம் என அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றோம்.

சிலவேளை ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் உயிருக்கு ஏதாவது நடந்தால் அதற்கு இந்த குண்டர்கள் குழுவை பயன்படுத்திய 'அரசியல் அதிகார' தரப்பு பொறுப்பு கூறவேண்டும்.

இன்று முட்டை வீச்சு தாக்குதல் நடத்தியவர்கள், நாளை வேறு நடவடிக்கையில் இறங்கலாம். எனவேதான், அநுரவை பாதுகாக்குமாறு மக்கள் வலியுறுத்துகின்றனர். எம்முடன் இவ்வாறு மோத வேண்டாம். மோதுவதாக இருந்தால் அரசியல் கொள்கை அடிப்படையில் மோதவும். அதேபோல முட்டை வீச்சு தாக்குதலால் எமது அரசியல் பயணத்தை நிறுத்தவும் முடியாது-என்றார்.

(அ)



# மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று 74 ஆவது சுதந்திர தினம்

மன்னார், பெப். 05

நாட்டின் 74 ஆவது சுதந்திர தின விழா நேற்று வெள்ளிக் கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகப் பணியாளர்கள் மன்னார் பஸார் பகுதியில் இருந்து மாவட்ட செயலகம் வரை தேசியக் கொடியை ஏந்தியவாறு அணி நடையாக சென்றனர்.

இதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த படை வீரர்கள் மற்றும் ஏனையவர்களுக்காக 2 நிமிட மௌனப் பிரார்த்தனையும் இடம்பெற்றதோடு, நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் சர்வமத பிரார்த்தனைகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள்,உதவி அரசாங்க அதிபர், பொலிஸ், இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வலயக்கல்வி பணிப்பாளர்கள்,மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகப் பணியாளர்கள், திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# மின் துண்டிப்பு சதித்திட்டமே!

## பொதுப்பயன்பாடு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 05

**தேசிய மின்சார கேள்வி குறைந்தளவான மட்டத்தில் நேற்றுமுன்தினம் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் மின் துண்டிப்பை அமுல்படுத்தியமை ஒரு சதித்திட்டமாகும் என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சார சபையினால் நேற்று முன்தினம் அமுல்படுத்தப்பட்ட மின் துண்டிப்புக்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியிருக்கவில்லை.

மின் துண்டிப்பில் ஈடுபடுவதற்கு முன்னர் தமது ஆணைக்குழுவின் அனுமதியை மின்சார சபை கோர வேண்டும்.

அதற்கான அனுமதி வழங்கப்பட்ட பின்னரே மின் துண்டிப்பை மேற்கொள்ள முடியும்.

எவ்வாறாயினும், அந்த நடைமுறை நேற்று முன்தினம் பின்பற்றப்படவில்லை.

மின்சார மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆகிய கட்டளைச் சட்டங்களை மீறியே மின் துண்டிப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# ஒமைக்ரோன் தொற்றால் பாதிப்பு அதிகரிக்கலாம்!

கொழும்பு, பெப். 05

ஒமைக்ரோன் தொற்றால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் தற்போது குறைவாகக் காணப்பட்டாலும் எதிர்காலத்தில் அந்த நிலைமை மாற்றமடையக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தொற்றாளர் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்தால் பாரிய அபாயத்தை எதிர் கொள்ள நேரிடும் என அவர் குறிப்பிட்டார்.

எனவே ஆரம்ப கட்டத்திலேயே தொற்றாளர் எண்ணிக்கையை குறைந்த மட்டத்தில் பேணக் கூடியதாக இருந்தால் இவ்வாறான ஆபாயங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படாது எனவும் அவர் கூறினார். (அ)

# ஒட்சிசன் தேவைப்படும் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, பெப் 05

கொழும்பு தேசிய வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் ஒட்சிசன் தேவைப்படும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 75 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு தேசிய வைத்திய சாலையின் வைத்தியர் ஹர்ஷ சதீஸ்சந்திர இந்த விடயத்தை தெரிவித்தார்.

இவ்வாறு சிகிச்சை பெற்று வரும் எந்தவொரு தொற்றாளரும் கொரோனா தடுப்பூசியை பெற்றிருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 325 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# உக்ரைன் தம்பதியின் காரை தாக்கியது காட்டு யானை!

கொழும்பு, பெப். 05

ஹபரணை வனப்பகுதியில் படம் எடுக்க முயற்சித்த உக்ரைன் நாட்டு தம்பதியினர் பயணித்த காரை, காட்டு யானையொன்று தாக்கியுள்ளது.

பொலனறுவையிலிருந்து ஹபரணை நோக்கிப் பயணித்தபோது, குறித்த வெளிநாட்டுத் தம்பதிகள், காட்டு யானையை படமெடுக்க முயற்சித்துள்ளனர்.

இதன்போது அந்தக் காட்டு யானை நடத்திய தாக்குதலில், அவர்கள் பயணித்த காருக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# ரணால பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 05

நவகமுவ-ரணால பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பு- அவிசாவளை பிரதான வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் பாதைக்கு அருகாமையில் சென்றுக்கொண்டிருந்த நபரொருவர் டிப்பர் வாகனத்தில் மோதி உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# வவுனியா சிறையில் இருந்தும் நேற்று ஒருவர் விடுதலையானார்

வவுனியா, பெப். 05

சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து கைதி ஒருவர் விடுதலை செய்யப்பட்டார்.

நாட்டின் 74 ஆவது சுதந்திரதினம் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில் நாடாளாவிய ரீதியில் அமைந்துள்ள சிறைச்சாலைகளில் இருந்து 197 கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அந்தவகையில் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் சிறுகுற்றம் ஒன்றைபுரிந்த நிலையில் தண்டப்பணத்தை செலுத்தமுடியாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்த 43 வயதான நபர் ஒருவர் நேற்று காலை விடுவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் சிறைச்சாலைகள் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

# லைசன்ஸ் பெற்றுக்கொள்வதற்காக வருவோரில் 10 வீதமானோர் போதைப்பொருளுக்கு அடிமை!

கொழும்பு, பெப். 05

சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக வருவோரில் 10 சதவீதமானவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக வருகைத்தந்தோரை தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு நாளில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 1 ஆயிரத்து 213 பேரில் 145 பேர் போதைப் பொருளை பயன்படுத்தியிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தநிலையில் போதைப் பொருளை பயன்படுத்திவிட்டு வாகனங்களைச் செலுத்தும் நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை அரசு கோரினால் பேச்சுவார்த்தைக்கு தயார்!

## சர்வதேச நாணய நிதியம்

கொழும்பு, பெப். 05

இலங்கை கோரிக்கை விடுத்தால், பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதானி இதனைத் தெரிவித்துள்ளாரென கூறப்பட்டுள்ளது.

பொருளாதார பிரச்னையைத் தீர்ப்பதற்காகச் சர்வதேச நாணய நிதியத்தின் நிபுணத்துவ ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை எழுத்து மூலம் விடுக்கப்பட்டுள் ளதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முன்னர் தெரிவித் திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தலைநகரில் இந்து கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்ட இந்து வித்தியாவிருத்தி சங்கம்

புலோலியூர்
ஆ.இரத்தினவேலோன்

## இன்று சங்கம் 70ஆவது அகவையினை நிறைவு செய்வதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது

இலங்கையில் நவீன அறிவியல் கல்விக்கு பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சி வித்திட்டாலும் தேசத்தில் கிறிஸ்தவ மதத்தினையும் கிறிஸ்தவ மிசனறிகளையும் பரப்புவதிலேயே அவர்கள் முனைப்பாகச் செயற்பட்டனர். இத்தருணத்திலேயே இந்து பௌத்த இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கான செயற்பாடுகளும் பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டன. இந்தவகையில் சைவத்திற்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் பௌத்தத்திற்காக அநகாரிக தர்மபாலாவும் இஸ்லாம் மதத்திற்காக அறிஞர் சித்தி லெப்பையும் தாம் சார்ந்த மதங்களை பேணிப் பாதுகாக்கவும் அதன் மறுமலர்ச்சிக்காகவும் தீவிர ஆர்வங் காட்டி வந்தனர்.

இதன் விளைவால் சுதந்திர இலங்கையில் தமிழர்கள் இருவேறு நிலைகளில் வாழத்தலைப்பட்டனர். மதம்மாற்றப்பட்ட நிலையில் ஆட்சியாளர்கள் வழங்கிய சலுகைகளை அனுபவித்தோடு ஆங்கிலக் கல்வியையும் பெற்று மேலத்தேய பாணியில் சிலர் தம் வாழ்வியலை முன்னெடுக்கலாயினர். மறுபுறத்தே மறுமலர்ச்சி சிந்தனையுடன் சைவமும் தமிழும் அதன் பண்பாடும் பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற கொள்கையுடன் பெருந்தொகையான தமிழர்கள் தம் வாழ்வினை மேற்கொண்டனர்.

இரண்டாவது பாதையினைத் தெரிவு செய்த நாவலர் சைவத்தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். நாவலரைத் தொடர்ந்து இந்து போர்ட் இராசரத்தினம் முன்னிலை வகித்தார். கிறிஸ்தவ மதம் வேகமாகப் பரவுவதைக் கண்ணுற்ற நாவலர் தமது ஆசிரியர் தொழிலினைத் துறந்து சைவத்தமிழ்ப் பாடசாலைகளை ஸ்தாபிக்கும் பணியில் ஈடுபடலானார்.

இத்தகு பின்னணியே கொழும்பு வாழ் இந்து மக்களிடையே 1951 ஆம் ஆண்டு முற்கூற்றில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தியது எனலாம். இருபத்து நான்கு இந்துச் சான்றோர்கள் ஒன்றிணைந்து எதிர்காலச் சந்ததியினருக்கு வரலாற்றில் விஞ்சி நிற்கத்தக்க அளப்பரிய சேவை ஒன்றினை ஆற்றுவதற்கு வித்திட்டனர். உச்ச நீதிமன்றத்தில் மிகவும் உயர்நிலையில் இருந்த மாண்புமிகு நீதியரசர் செல்லப்பா நாகலிங்கம் தலைமையில் அரச சேவையில் உயர் பதவி வகித்த பிரமுகர்கள் சட்டத்துறை வல்லுநர்கள், பிரபல தொழில் அதிபர்கள், பட்டயக்கணக்காளர்கள் ஆலய அறங்காவலர்கள் போன்ற தகைசான்ற சமூகத்தில் உயர் அந்தஸ்திலுள்ள பேராளுமைகள் இந்து என்ற நாமத்துடன் முதற்தடவையாக 05.02.1951 இல் கொழும்பில் ஒன்று கூடி எதிர்கால இந்து சமூகத்தினர் தமது பாரம்பரியத்தைப் பேணி கல்வி கற்றுயர ஏதுவாக இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தினை நிறுவினர்.

நீதியரசர் சி.நாகலிங்கம் அவர்களுடன் புகழ் பூத்த சிவில் சேவை அதிகாரிகளாக விளங்கிய சேர். கந்தையா வைத்தியநாதன் கோ.ஆழ்வாப்பிள்ளை மற்றும் கலாநிதிகள் ஏ.கந்தையா, வி.நடராசா பட்டையக் கணக்காளர் கு.சச்சிதானந்தா கொழும்பு மேயர் எஸ்.செல்லமுத்து வர்த்தகத்துறை விற்பனர்களாக விளங்கிய எஸ்.மகாதேவன் (மகாராஜா நிறுவனம்) ஆர்.ஏ.நடேசன் (வீரகேசரி நிறுவனம்), ஏ.சுப்பிரமணியம் (மஸ்கன்ஸ் நிறுவனம்), கே.சி.தங்கராஜா (காகிதத் தொழிற்சாலை), பொறியியல் நிபுணர் ஏ.இரகுநாதர், இளைப்பாறிய ரோயல் கல்லூரி துணை அதிபர் எம்.எம்.குலசேகரம்இ சட்டறிஞர்களான கே.ரி.சிற்றம்பலம்இ எஸ்.சோமசுந்தரம், செனட்டர் பெரி.சுந்தரம், செனட்டர் எஸ்.நடேசன், வி.ஏ.கந்தையா மற்றும் சி.கே.இரத்தினம், எம்.எஸ்.கந்தையா, சங்கர்ஜயர் மகாதேவன், எம். வைரமுத்து, எம்.கனகசபை ஆகியோருடன் சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய அறங்காவலரும் இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் தோற்றத்திற்கு தோள் கொடுத்து நின்றனர் எனலாம்.




இந்து மதப் பிள்ளைகள் கல்லூரி அனுமதி கோரி வேறு மத நிறுவனப் பாடசாலைகளை அணுகிய போது அவர்கள் எதிர்கொண்ட சவால்களே இந்து வீத்தியாவிருத்திச் சங்கத்தினை எழுச்சியுற வைத்தது. அதன் விளைவாக பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் கோயில் மடத்தில் 12.02.1951 இல் 55 பிள்ளைகளுடன் இந்து ஆண்கள் பாடசாலை ஒன்று உதயமாயிற்று. ஆரம்பத்தில் இப்பாடசாலை "பிள்ளையார் பாடசாலை" என்றே அழைக்கப்படலாயிற்று. ஆரம்பிக்கப்பட்ட சில தினங்களிலேயே, அதாவது பங்குனி மாதத்திலேயே கோயில் நிர்வாகத்தினர் வழங்கிய நிலக்கொடை காரணமாக தற்போது "இந்துக் கல்லூரி கொழும்பு" அமைந்திருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது.

ஆனால் இந்து வித்தியாவிருத்திச் சங்கம் இந்துக் கல்வி நிறுவனம் தொடர்பில் கொண்டிருந்த கனவு மிகப்பெரியது. இரத்மலானையில் நூறு ஏக்கர் விசாலமாயிருந்த சதுக்கத்தை சங்கத்தினர் சொந்த அடமானத்துடன் கடனெடுத்து வாங்கினார்கள். 1955 ஆம் ஆண்டில் அங்கு பெருங் கல்விக் கூடமாக கொழும்பு இந்துக் கல்லூரி கட்டப்பட்டது. இரத்மலானையில் நிறுவப்பட்ட கல்லூரிதான் கொழும்பு இந்துக் கல்லூரியாக இன்றும் விளங்குகின்றது. பம்பலப்பிட்டியில் ஆரம்பமான பிள்ளையார் பாடசாலையில் படிக்கும் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் இரத்மலானையில் எழுந்த இந்துக் கல்லூரிக்கு அனுப்பப்பட வேண்டும் என்பது தான் முதலில் போடப்பட்ட திட்டம். இரண்டும் இணைந்து ஓர் அறிவு ஆலயமாக கனவு காணப்பட்டது. ஆனால் 1956 இலும் அதன் பின்னராகவும் அடிக்கடி நிகழ்ந்த இனக் கொடூர நிகழ்வுகள் பம்பலப்பிட்டியில் படித்த இந்துக் கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இரத்மலானைக்கு அனுப்ப தயங்க வைத்தன.

> இந்து வித்தியா விருத்திச் சங்கம் உருவாக்கிய இரு இந்து கல்லூரிகளும் சரஸ்வதி மண்டபமும் கொழும்பு இந்து மதக் கல்வியின் மறுமலர்ச்சிக்கு மையங்களாக மட்டுமன்றி அதற்கு மேலாக தலைநகரில் இந்து மக்களின் கேந்திர நிலையங்களாகவும் கடந்த ஏழு தசாப்தங்களாக உயர்ந்து நிற்கின்றன.

இதன் விளைவாக பம்பலப்பிட்டியில் 'பிள்ளையார் பாடசாலை' கனிஸ்ட இந்துக் கல்லூரியாக வளர்ந்து இறுதியாக தேசியக் கல்லூரி அந்தஸ்துடனான உயர் கல்வி நிலையமாக உயர்ந்தது. இரத்மலானையில் 'கொழும்பு இந்துக் கல்லூரி' அமைந்திருப்பதால் பம்பலப்பிட்டியில் உள்ள கல்லூரி 'இந்துக் கல்லூரி கொழும்பு' எனப் பெயரிடப்பட்டது. இவ்வாறான கல்வி நடவடிக்கையின் மேலும் ஒரு தொடர்ச்சியாக 1953 இல் சரஸ்வதி மண்டபம் கட்டப்பட்டது. இந்து வித்தியா விருத்திச்சங்க நிதிக்காக பல நாடகங்களும் ஆரம்ப நாட்களில் அங்கு அரங்கேற்றப்பட்டன. 1961 ஆம் ஆண்டு சங்கத்தின் ஆளுநர்கள் பிள்ளையார் பாடசாலையை அரசிற்கு கையளித்த போது சரஸ்வதி மண்டபத்தை இந்து வித்தியாவிருத்திச் சங்கத்திற்கென வைத்துக் கொண்டே பாடசாலையை கையளித்தனர். இதன் விளைவால் தென் கொழும்புப் பிரதேசத்தில் தமிழர்களுக்கும் இந்துக்களுக்கும் கலை கலாசார மற்றும் வைபவ நிகழ்வுகளை நடாத்துவதற்கு தக்கதோர் தளமாக சரஸ்வதி மண்டபம் விளங்கிற்று.

பம்பலப்பிட்டி கொழும்பு இந்துக் கல்லூரியும் சரஸ்வதி மண்டபமும் கொழும்பு வாழ் இந்து மக்களின் மறுமலர்ச்சி மையங்களாக மட்டுமின்றி அதற்கும் மேலாக தலைநகரில் இந்து மக்களின் கேந்திர நிலையங்களாகவும் கடந்த ஏழு தசாப்தங்களாக இயங்கி வந்திருக்கின்றன. சரஸ்வதி மண்டபம் இடைத்தங்கல் முகாமாகவும் அவ்வப்போது செயற்பட்டு தன் சேவையினை இச் சமூகத்திற்கு திறம்படவே செய்திருக்கின்றது. குறிப்பாக 1983 ஆடிக் கலவரத்தின் போது வதிவிடம் மற்றும் உடைமைகளை இழந்து அகதிகளாகத் தஞ்சங்கோரித் தவித்த தமிழர்களுக்கு ஆதரவளித்து அவர்கள் புனர்வாழ்வு பெறும் வரையில் இடைத்தங்கல் முகா மாகச் செயற்பட்டு வரலாற்றில் இடம் பெற்றமையைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

அகில இலங்கை இந்து மாமன்றத்து டன் இணைந்து கடந்த மூன்றரை தசாப்தங்காளாக பல சமூக நலப்பணி களை இந்து வித்தியா விருத்திச் சங்கம் ஆற்றிவருவதும் இங்கு குறிப்பிடத்தக் கது. இச் சங்கத்தின் ஆளுநர்கள் பலர் இந்து மாமன்றத்திலும் அங்கம் வகிப்ப தால் பல சேவைகளை இலகுவில் நிறை வேற்றிக் கொள்ள வசதியாக அமைந்துள் ளது. இவ்வகையில் இந்து வித்தியா விருத்திச் சங்கம் இரத்மலானை இந்துக் கல்லூரியில் சுமார் 110 பேர்ச் காணியை அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு சகாய விலையில் விற்றதுடன் மிகுதி 110 பேர்ச் காணியை பாவிக்கவும் அனுமதி கொடுத்திருப்பதனையும் குறிப்பிடலாம்.

இந்து வித்தியா விருத்திச் சங்கம் உருவாக்கிய இரு இந்து கல்லூரிகளும் சரஸ்வதி மண்டபமும் கொழும்பு இந்து மதக் கல்வியின் மறுமலர்ச்சிக்கு மையங்களாக மட்டுமன்றி அதற்கு மேலாக தலைநகரில் இந்து மக்களின் கேந்திர நிலையங்களாகவும் கடந்த ஏழு தசாப்தங்களாக உயர்ந்து நிற்கின்றன.

எழுபதாவது ஆண்டு நிறைவினையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே பேச்சுப்போட்டி, விவாதப் போட்டி முதலானவற்றை ணழழஅ வழி நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறுகின்றன.டு

# ‘தமிழர்களை ஒருபோதும் ஆள முடியாது’ இது காங்கிரஸிற்கும் பொருந்துமா?

ஆ. விஜயானந்த்



தமிழ்நாடு குறித்து மக்களவையில் ராகுல்காந்தி பேசிய பேச்சுக்கு பா.ஜ.க தரப்பில் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. “மாநிலங்களின் ஒன்றியம் இது. மத்தியில் இருந்து மட்டும் யாராலும் அதிகாரம் செலுத்த முடியாது. அது உண்மை. நமது அரசியலமைப்புச் சட்டத்திலும் அது தெளிவாக உள்ளது. ராகுல் காந்தியின் பேச்சு வரவேற்கத்தக்கது,” என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள்.

இந்திய நாடாளுமன்றத்தில் குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது காங்கிரஸ் கட்சியின் எம்.பி ராகுல்காந்தி ஆற்றிய உரையின் காணொளி சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது.

அவர் தனது பேச்சில், “நீட் தேர்வுக்கு விலக்கு வேண்டும் என தமிழ்நாடு தொடர்ந்து உங்களிடம் கோரிக்கை வைத்து வருகிறது. ஆனால், தமிழ்நாட்டின் கோரிக்கைகள் உங்கள் காதுகளுக்கு எட்டவில்லை. அவர்களின் கோரிக்கையை மறுத்து நீங்கள் அவர்களை வெளியேற்றுகிறீர்கள். மக்களின் கருத்தை அரசர் கேட்காதது போல உங்களின் அரசு செயல்படுகிறது. அனைத்து மாநில மக்களுக்கும் சமஉரிமை கொடுக்கப்பட வேண்டும்,” என்றார்.

தொடர்ந்து பேசுகையில், கூட்டாட்சி என்பது, தமிழ்நாட்டில் உள்ள சகோதரரிடம் என்ன வேண்டும் என நான் கேட்பது பின் அவர் தேவையை என்னிடம் சொல்வதுபோல எனக்குத் தேவையானதை நானும் கேட்டுப் பெறுவேன். இது ஒன்றும் முடியாட்சி அல்ல. நீங்கள் ராஜாவும் அல்ல. மாநில சுயாட்சியில் தமிழ்நாட்டிடம் இருந்து இந்தியா கற்றுக் கொள்ள வேண்டும். உங்கள் வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டு மக்களை உங்களால் ஆள முடியாது. தமிழ்நாட்டு மக்களின் மனங்களில் தமிழ் மொழி பற்றிய சிந்தனை உள்ளது. கேரள மக்களுக்கும் ஒரு கலாசாரம் உள்ளது. நான் கேரளாவில் இருந்து மக்களவைக்குத் தேர்வானவன். அதனை நானும் உணர்கிறேன். அவர்களுக்கு என அடையாளமும் சிந்தனையும் உண்டு. நான் அவற்றைக் கற்றுக் கொள்கிறேன்,“ என்றார்.

தொடர்ந்து பாராளுமன்றத்தில் இருந்து வெளியே வந்த ராகுலிடம், தமிழ்நாடு குறித்துப் பேசியது குறித்து கேட்டபோது “நானும் தமிழன்தான்” என பதில் அளித்த காட்சியும் வைரலானது.



ராகுல்காந்தியின் பேச்சு தொடர்பாக ருவிட்டரில் பதில் அளித்துள்ள தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலை, “தமிழ்நாட்டின் மைந்தன் என்ற முறையில் உங்களை வழிநடத்த விரும்புகிறேன். தமிழகத்தில் தி.மு.கவின் ஆக்சிஜன் உதவியுடன் ஐ.சி.யூவில் இருக்கிறீர்கள். நாங்கள் புதுச்சேரியில் ஆட்சியில் இருக்கிறோம். நமது பிரதமரின் தொலைநோக்குப் பார்வையை அங்கீகரித்த புதுவை மக்களுக்கு நன்றி. அது ஒரு மைல்கல். அந்த மைல் கல்லின் அடுத்த ஜங்ஷன் தமிழகமாக இருக்கும்” என பதிவிட்டுள்ளார்.

இதையடுத்து, ராகுல்காந்தியின் பேச்சு குறித்து பிபிசி தமிழிடம் பேசிய மூத்த பத்திரிகையாளர் என்.ராம், “அதை ஒரு சிறந்த பேச்சாகவும் உண்மையான பேச்சாகவும் பார்க்கிறேன். அவரது பேச்சுக்கு தமிழ்நாட்டில் வரவேற்பு கிடைத்துள்ளது. அதன் சாராம்சம் என்னவென்றால், இது மன்னர் காலம் கிடையாது. மாநிலங்களின் ஒன்றியம் இது. மத்தியில் இருந்து மட்டும் யாராலும் அதிகாரம் செலுத்த முடியாது என்பதுதான் உண்மை. நமது அரசியலமைப்புச் சட்டத்திலும் அது தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதனை தமிழ் மக்கள் புரிந்து வைத்துள்ளனர். அதனை தமிழ்நாடு முதல்வர் வரவேற்றுள்ளார். அது ஒரு நல்ல நினைவூட்டல்“ என்கிறார்.

“மாநிலங்களின் கோரிக்கைக்கு செவி சாய்க்காமல் இருந்தது என்பது காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலும் நடந்தது தானே?” என்றபோது, “உண்மைதான். இந்த விவகாரத்தில் காங்கிரஸ் கட்சியும் தன்னை சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டும். அவர்கள் தொடங்கியதுதான் இவையெல்லாம். அவசர நிலையின்போது மாநில அரசுகளுக்கு என்ன அதிகாரம் இருந்தது? மக்களுக்கே எந்த அதிகாரமும் அப்போது இல்லை. தமிழ்நாட்டில் இரண்டு முறை தி.மு.க ஆட்சியைக் கலைத்துள்ளனர். காங்கிரஸ்காரர்கள் ஒன்றும் அப்பாவிகள் அல்ல.

> **1967ஆம் ஆண்டுடன் தமிழ்நாட்டில் தேசியக் கட்சிகளின் சகாப்தம் முடிந்துவிட்டது. அதன்பிறகு காங்கிரஸ் கட்சியோ, பாரதிய ஜனதா கட்சியோ திராவிட இயக்கங்களைத் தாண்டி வர முடியவில்லை. எம்.ஜி.ஆர், ஜெயலலிதா இருந்தபோது முக்கிய அதிகார மையமாக அ.தி.மு.க இருந்தது. இன்றைக்கு தி.மு.கவின் காலம்.**

ஒரு கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்காவிட்டால் கூட்டணி ஆட்சி நடக்கும். இது அரசியலமைப்பு சார்ந்த கூட்டணி அல்ல. மாநிலக் கட்சிகளுடன் கலந்து பேசி முடிவெடுப்பார்கள். காங்கிரஸ் கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்கும்போது, மாநிலங்களைக் கண்டு கொள்வதில்லை. ஆனால், அவசர நிலையைத் தவிர அதைவிட மோசமான நிலைக்கு தற்போதைய அரசு எடுத்துச் சென்றுள்ளது. அவசர நிலையை எதனோடும் நான் ஒப்பிட மாட்டேன். எங்களுக்கு அந்த அனுபவம் உள்ளது. மத்திய புலனாய்வுத்துறை, அமுலாக்கத் துறை, வருமான வரித்துறை ஆகியவற்றை மத்தியில் ஆட்சிக்கு வருபவர்கள் தவறாகப் பயன்படுத்துகின்றனர். இது மோசமான திட்டம். அதனால்தான் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் ராகுல் பேசியதை வரவேற்கிறோம்,” என்கிறார் ராம்.

“காங்கிரஸ் ஆட்சியிலும் சி.பி.ஐ, அமுலாக்கத்துறை ஆகியவை அரசியலுக்காக பயன்படுத்தப்பட்டதே?” என்றபோது, “அதனை ராகுல் செய்யவில்லை. அவரை யாராவது நேர்காணல் செய்யும்போது இதனை அவர் ஏற்றுக் கொள்வார் என நினைக்கிறேன். அவசர நிலையை தவறு எனச் சொல்வதுபோல, இதனையும் சொல்வார். அதனைச் சொல்லும்போதுதான் மக்கள் நம்புவார்கள்” என்கிறார் ராம்.

தொடர்ந்து நீட் தேர்வு சர்ச்சை குறித்துப் பேசிய என்.ராம், “நீட் விவகாரத்தைப் பொறுத்தவரையில் அந்தந்த மாநிலங்களில் உள்ள மக்களின் நிலைமையைப் பொறுத்துத்தான் பேச முடியும். அனைத்து மாநிலங்களிலும் ஒரே மாதிரியான சட்டங்களைப் போட முடியாது. தமிழ்நாட்டில் நீட் பிரச்னை பேசப்படுகிறது. இங்கு சமூக நீதியால் தான் பலரும் மருத்துவ படிப்பை படிக்க முடிந்தது என்ற பார்வை உள்ளது. ராகுல் காந்தி பேசுவதை தவறு என கூற மாட்டேன். இதர மாநில மக்களின் கோரிக்கைகளை பொறுத்துத்தான் முடிவெடுக்க முடியும். அதற்கு தேசிய அளவில் முக்கியத்துவம் கொடுப்பதை பார்க்க முடிகிறது.

அதேநேரம், **1967**ஆம் ஆண்டுடன் தமிழ்நாட்டில் தேசியக் கட்சிகளின் சகாப்தம் முடிந்துவிட்டது. அதன்பிறகு காங்கிரஸ் கட்சியோ, பாரதிய ஜனதா கட்சியோ திராவிட இயக்கங்களைத் தாண்டி வர முடியவில்லை. எம்.ஜி.ஆர், ஜெயலலிதா இருந்தபோது முக்கிய அதிகார மையமாக அ.தி.மு.க இருந்தது. இன்றைக்கு தி.மு.கவின் காலம். சுய மரியாதை, பெண்ணுரிமை, சமூக நீதி ஆகியவை இங்கு முக்கியமாக உள்ளது. சிலருக்கு ஆட்சேபனை இருந்தாலும் பெரும்பான்மையான மக்களின் எண்ணங்களை அடிப்படையாக வைத்து அதனை வரவேற்க வேண்டும். எஸ்.சி, எஸ்.டி பிரிவுகள் ஒருபக்கம் இருந்தாலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்பட்டது இங்கேதான். நீட் தொடர்பாக மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். மாநிலங்கள் அதிகமாக கேட்டாலும் அதில் பொதுவான எண்ண ஓட்டம் வர வேண்டும்” என்கிறார் ராம்.

“தமிழ்நாட்டில் ஒருபோதும் உங்களால் ஆள முடியாது என ராகுல் பேசினார். தமிழ்நாட்டில் காங்கிரஸ் எங்கே உள்ளது எனப் பாருங்கள் என பா.ஜ.க விமர்சிக்கிறதே?” என்றபோது, “ராகுல் காந்தி, காங்கிரஸ் கட்சியை பற்றிக் கூறவில்லை. அவர்களின் காலம் என்பது முடிந்துவிட்டது. மத்தியில் பா.ஜ.கவுக்கு அதிகாரம் இருந்தாலும் இங்கு எதையும் செய்ய முடியவில்லை. இந்தி திணிப்பு உள்பட பல்வேறு விஷயங்கள் இங்குள்ள மக்களுக்குப் பிடிக்கவில்லை. மொழி, சிந்தனை உணர்வு அதிகம்.

தமிழ்நாட்டுக்கென பா.ஜ.கவுக்கு ஒரு திட்டம் உள்ளது. ஆனால் எதுவும் முடியவில்லை. எத்தனையோ கட்சிகளுக்கு குஷ்பு மாறியுள்ளார். தி.மு.க, காங்கிரஸ் ஆகிய கட்சிகளில் அவர் இருந்துள்ளார். இன்னும் அ.தி.மு.கவுக்கு மட்டும்தான் அவர் செல்லவில்லை. ராகுலுக்கு எதிராக பதில் அளிப்பதால் அவர் பெரிய தலைவரா? அவர் நல்ல நடிகை. ஆனால், அரசியலில் தோற்றுவிட்டார். பொதுவாழ்வுக்கு வருகிறவர்களை மக்கள் நம்பும் அளவுக்குச் செயல்பட வேண்டும்.

அண்ணாமலை பழைய போலீஸ் அதிகாரி. அவருக்கு இங்கே என்ன அடிப்படை உள்ளது? போலீஸ்காரர்களை பா.ஜ.க அதிகப்படியாக பயன்படுத்துகிறது. குறிப்பாக ஆளுநராக நியமிப்பது உள்பட. கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் மதவாத சக்திகளால் முன்னேற முடியவில்லை. ஆர்.எஸ்.எஸ் கடுமையாக வேலை செய்தாலும் மக்களுக்குப் பிடிக்கவில்லை. இவ்வளவு அதிகாரம் உள்ள பா.ஜ.க, இங்கே முன்னேறாததைப் பற்றி சிந்திக்க வேண்டும்” என்கிறார் ராம்.

- பி.பி.சி.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

24) i) ஒருவருக்கு 8 புத்தகங்கள் வீதம் 14 மாணவர்களுக்கு கொடுப்பதற்கு தேவையான புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................

ii) 420 மாம்பழங்கள் 4 பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியிலுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................


25) ஒரு தோடம்பழத்தின் விலை ரூபாய் 8.00 எனின் 12 தோடம்பழங்களுக்காகக் கொடுக்க வேண்டிய மொத்தப் பணம் யாது?

.......................................................................................................

26) ஒரு பாத்திரலுள்ள மண்ணெண்ணெய் இலிருந்து 6 லீற்றர் 250 மில்லிலீற்றரை அகற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் கனவளவு 12 லீற்றர் 475 மில்லிலீற்றர் ஆகும். பாத்திரத்திலே முதலில் இருந்த மண்ணெண்ணெய் இன் கனவளவு யாது?

.......................................................................................................

27)




i) வீட்டிற்கு எத்திசையில் நுழைவாயில் அமைந்துள்ளது?

.......................................................................................................

ii) கிணற்றுக்கு மேற்குத் திசையில் அமைந்திருப்பவை எவை?

.............................................., ..............................................

28) பின்வரும் சிட்டையைப் பூர்த்தி செய்க.

| பொருள் | 1kg இன் விலை | | அளவு | விலை | |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் | சதம் | | ரூபாய் | சதம் |
| சீனி | 120 | 00 | 500g | 60 | 00 |
| தேயிலை | 550 | 00 | 100g | ...... | .... |
| பால்மா | .......... | .... | 250g | 150 | 00 |
| மொத்தப்பணம் | | | | 265 | 00 |

36) அந்நியர் ஆட்சிக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தில் பிரதான தளபதியாகச் செயற்பட்டமையால் மலாக்காவிற்கு நாடு கடத்தப்பட்டவர்.
1. மொனராவில கெப்பட்டிப் பொல திசாவை
2. கொங்காலே கொட பண்டா
3. மொல்லி கொடி திசாவ

37) வண்ணத்துப்பூச்சி முட்டைகளை இடுவது
1. தாவர இலைகளின் மேற்பரப்பில்
2. பூக்களின் மகரந்த மணிகளில்
3. தாவர இலைகளின் கீழ்ப்புறத்தே

38) எமது நாட்டிற்கே உரித்தான பறவைகள்
1. சபன்கோழி, கொக்கு
2. மயில், கொக்கு
3. காட்டுக்கோழி, சபன் கோழி

39) தாள்களைத் துளையிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம்
1. பிணை கருவி 2. துளைகருவி 3. அடிமட்டம்

40) உணவு வேளை ஒன்றில் ஈற்றுணவாக உண்ணப் பொருத்தமான பழம்
1. தோடம்பழம் 2. விளாம்பழம் 3. வாழைப்பழம்

41) பலாக்காய், ஈரப்பலாக்காய், தானியவகை போன்றவற்றில் அதிகளவு அடங்கியுள்ள போசணைக் கூறு
1. காபோவைதரேற்று 2. புரதம் 3. இலிப்பிட்டு

## விடைகள்

24) i) 112
ii) 105
25) 96 ரூபாய் / ரூபாய் 96.00
26) 18 லீற்றர் 725 மில்லிலீற்றர்
27) i) தெற்கு
ii) வீடு, பூந்தோட்டம்
28) i) 55.00
ii) 600.00
29) i) 6 வரை நிழற்ற வேண்டும்
ii) 10

30) 2
31) 2
32) 1
33) 3
34) 1
35) 1
36) 2
37) 3

38) 3
39) 2
40) 3
41) 1

கல்வி tv CHANNEL-1

**05.02.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**05.02.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# காத்தான்குடி பள்ளிவாசலில் சுதந்திர தின கொண்டாட்டம்!

காத்தான்குடி, பெப். 05
நாட்டின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வு காத்தான்குடி பத்ரிய்யஹ் ஜும்ஆ பள்ளி வாசலில் நேற்று இடம்பெற்றது.

அதிதிகள் ரபான் அடித்து வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து பள்ளிவாசல் முன்றிலில் அதிதிகளினால் தேசியக் கொடி ஏற்றி தேசியக்கீதம் இசைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து சுதந்திர தின நினைவாக அதிதிகளால் பயன்தரும் மரக்கன்றுகள் நாட்டிவைக்கப்பட்டன.

சுதந்திர தின பிரதான நிகழ்வுகள் பள்ளிவாசலின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. கலாசார நிகழ்வுகளைத் தொடர்ந்து அதிதிகளின் உரை இடம்பெற்றது. சுதந்திர தினத்தை முன்னிட்டு கொரோனா நோயிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் எனும் வகையில் விசேட துஆ பிரார்த்தனையும் இதன்போது இடம்பெற்றது. (ஐ)

# மட்டக்களப்பு கச்சேரியில் சுதந்திர தின நிகழ்வுகள்!

மட்டக்களப்பு, பெப். 05
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு தேசியக் கொடியையும் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக உயரதிகாரிகள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், பொலிஸ் உயரதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் அரச நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தேசியகொடி ஏற்றி தேசிய கீதம் இசைத்தலுடன்



நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

அரசாங்க அதிபரின் சுதந்திர தின உரையைத் தொடர்ந்து, இராஜாங்க அமைச்சரின் விசேட உரையாற்றினார்.

அதனைத்தொடர்ந்து சிரேஷ்ட பிரஜையை கௌரவிக்கும் முகமாக முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். புண்ணியமூர்த்திக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். சுதந்திர தினத்தை முன்னிட்டு மாவட்ட செயலக வளாகத்தில் மரக்கன்றுகள் அதிதிகளால் நாட்டிவைக்கப்பட்டன. (ஐ)

# போரதீவுபற்று பிரதேசத்தின் அபிவிருத்தி கூட்டம் நடந்தது!



போரதீவு, பெப். 05
மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்றுப் பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டம் பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவர் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், அப்பிரதேச அபிவிருத்தி இணைத் தலைவரும், ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளருமான பரமசிவம் சந்திரகுமார், போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் ஆர். இராகுலநாயகி, மற்றும் போரதீவுப்பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர் யோ.ரஜனி, மற்றும் பிரதேச சபைத் உறுப்பினர்கள், திணைக்கள மற்றும், அதிகார சபைகளின் அதிகாரிகள், கிராமிய மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, நீர்ப்பாசனம், விவசாயம், கமநல அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி, மின்சாரம், நீர்வழங்கல், மீன்பிடி, வனபரிபாலனம், வன ஜீவராசிகள், கால்நடை, போக்குவரத்து, வீடமைப்பு, விளையாட்டு, கிராமிய அபிவிருத்தி, சமூர்த்தி, புவிச்சரிதவியல், உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. போரதீவுப்பற்றுப் பிரதேச அபிவிருத்திக்காக இவ்வருடம் 182.750 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் நிலவும், ஆசிரியர் பற்றாக்குறை, குடிநீர் பிரச்சனை, தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பான விடையங்கள், அப்பிரதேசத்தில் தற்போது வரைக்கும், 42 வீதம் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதை துரிதப்படுத்தல், பிறப்பு வீதம், சத்துணவு, மின்சார இணைப்பு வசதிகளைத் துரிதப்படுத்தல், பிரதேசத்தில் தங்கி நிற்கும் காட்டு யானைகளைத் அப்புறப்படுத்தல், வீடுகட்டும் பயனாளிகளுக்கு குறைந்த விலையில் மணல் அனுமதிப்பத்திரம் வழங்கல் உள்ளிட்ட பல தீர்மானங்கள் இதன்போது எடுக்கப்பட்டன.



# மட்டு. பிரதேச செயலகங்களில் சுதந்திர தினக் கொண்டாட்டம்

மண்முனைப்பற்று, பெப். 05
நாட்டின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களிலும் நேற்றுக் காலை நடைபெற்றன.

மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி ல.பிரசந்தன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் அ. சுதர்சன் உட்பட உத்தியோகத்தர்கள், திணைக்கள தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது தேசிய கொடியேற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டதை தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீர்த்த இராணுவத்தினர் மற்றும் பொதுமக்களுக்காக இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு உதவி பிரதேச செயலாளரால் விசேட உரை நிகழ்த்தப்பட்டது.

இதன்போது இலங்கையின் 74வது சுதந்திர தினத்தினை குறிக்கும் வகையில் மரக்கன்று கள் நடப்பட்டதுடன் கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் சிரமதான பணிகளும் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

# தமிழ் - முஸ்லிம் உறவுக்காக உழைத்த ஜவாத் காலமானார்

காத்தான்குடி, பெப். 05
தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவுக்காக உழைத்தவரும் விடுதலைப் புலிகள், இந்திய இராணுவத் தரப்புகளுடன் பல பேச்சுக்களில் பங்கேற்றவருமான அல்ஹாஜ் ஏ. எல். அப்துல் ஜவாத் காலமானார்.

காத்தான்குடி நகர முதல்வரான இவர் கடந்த புதன்கிழமை காலமானார். அன்னாரின் ஜனாஸா தொழுகை மற்றும் நல்லடக்கம் அஸர் தொழுகையைத் தொடர்ந்து முஹ்யித்தீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.

காத்தான்குடி - ஆரையம்பதி எல்லைப் பகுதிகளில் தமிழ் முஸ்லிம் சமூகங்களிடையே பதற்றம் நிலவிய காலங்களில் ஆரையம்பதியைச் சேர்ந்த அதிபர் கனகரெத்தினம் மற்றும் அதிபர் கணபதிப்பிள்ளை, ஆசிரியர் தவராஜா ஆகியோருடன் இணைந்து சமாதான குழுவை அமைத்து காத்திரமான பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மட்டு. சிறையிலிருந்த 11 பேருக்கு விடுதலை!

மட்டக்களப்பு, பெப். 05
நாட்டின் 74ஆவது சுதந்திர தினமான நேற்று மட்டக்களப்பு சிறையிலிருந்த 11 பேர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர்.

65 வயதுக்கு மேற்பட்டவர்கள், அபராதம் செலுத்தாமையால் சிறைவாசம் அனுபவித்தவர்கள், நிர்ணயிக்கப்பட்ட தண்டனைக் காலத்தில் அரைவாசிக் காலத்தை நிறைவு செய்தோர் அல்லது அதற்கு மேல் சிறைவாசம் அனுபவித்தவர்ளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை, சுதந்திர தினமான நேற்று நாடு முழுவதும் 197 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஊடகவியலாளருக்கு சுதந்திர நாளில் தடை!

மட்டக்களப்பு, பெப். 05
மட்டக்களப்பு மாவட்ட சுதந்திர ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சசிகரனுக்கு மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரால் தடை உத்தரவு ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினமான நேற்று அரசாங்கத்துக்கு எதிராக கல்லடி பாலம் முதல் காந்தி பூங்கா வரை பேரணி மற்றும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது என்று கூறியே புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவு நேற்று காலை ஊடகவியலாளருக்கு பொலிஸாரால் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் உதவியாளர்கள் இராஜினாமா!

லண்டன், பெப். 05

பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் நான்கு மூத்த உதவியாளர்கள், டவுனிங் ஸ்ட்ரீட்டில் தங்களது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

கொள்கை திட்டத் தலைவர் முனிரா மிர்சா தனது பதவியை இராஜினாமா செய்த சிறிது நேரத்திலேயே தகவல் தொடர்பு இயக்குநர் ஜெக் டோய்ல் தனது இராஜினாமாவை உறுதிப்படுத்தினார்.

கடந்த வியாழக்கிழமை, தலைமைப் பணியாளர் டான் ரோசன்ஃபீல்ட் மற்றும் மூத்த சிவில் ஊழியர் மார்ட்டின் ரெனால்ட்ஸ் ஆகியோரும் தங்களது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

பிரதமர் ஜோன்சன் தனது கட்சிக்குள்ளேயே அவரது தலைமை குறித்து கேள்விகள் அதிகரித்து வருகின்ற நிலையில், இந்த உயர்மட்ட உதவியாளர்களின் இந்த இராஜினாமா அறிவிப்புகள் வெளிவந்துள்ளன.

தகவல் தொடர்பு இயக்குனர் ஜெக் டோய்ல், ‘சமீபத்திய வாரங்கள் எனது குடும்ப வாழ்க்கையில் பயங்கரமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது’ என்று கூறினார்.

10ஆம் எண் அலுவலக செய்தித் தொடர்பாளரின் அறிக்கையில், ‘ரோசன்ஃபீல்ட் தனது இராஜினாமாவை கடந்த வியாழக்கிழமை பிரதமரிடம் தெரிவித்ததாகவும், ஆனால் அவரது இடத்திற்கு இன்னொருவரை நியமிக்கும் வரை அவர் தொடர்ந்து பணியில் இருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டது. பிரதமரின் முதன்மை தனிப்பட்ட செயலாளரான ரெனால்ட்ஸ், பின்னர் வெளியுறவு அலுவலகத்தில் ஒரு பணியை தொடருவார்.

## ஸ்பெயின் கனேரி தீவு கடலில் படகு கவிழ்ந்து 16 பேர் மாயம்

மட்ரிட், பெப். 05

ஸ்பெயினில் கனேரி தீவு கடலில் படகு கவிழ்ந்த விபத்தில் 16 பேர் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக ஸ்பெயினுள் நுழைய 58 பேர் வந்த படகு நடுக்கடலில் கவிழுந்து விபத்துக்குள்ளானது. இது குறித்து தகவல் அறிந்து வந்த கடலோர காவல் படையினர் 41 பேர் மற்றும் உயிரிழந்த ஒருவரின் உடலை மீட்டு கரைக்கு திரும்பினர்.

படகு நெரிசல்களுக்கு மத்தியல் பயணம் செய்ததால் விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என்றும் காணாமல் போன 16 அகதிகளை தேடும் பணி நடந்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# போராட்டக்காரர்களை அகற்ற இராணுவம் களமிறக்கப்படாது

## கனடா பிரதமர் அறிவிப்பு

ஒட்டாவா, பெப். 05

கனேடிய தலைநகர் ஒட்டாவாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சரக்கு வாகன சாரதிகளை அங்கிருந்து அகற்ற இராணுவத்தைப் பயன்படுத்தும் திட்டம் இதுவரை இல்லை என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

ஒட்டாவாவிலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றுவதற்கான இராணுவத் தலையீட்டை நிராகரிக்க முடியாது என ஒட்டாவா தலைமை பொலிஸ் அதிகாரி கருத்து வெளியிட்டிருந்த நிலையிலே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கனேடிய சரக்கு வாகன சாரதிகளுக்கான கட்டாய கோவிட் தடுப்பூசி ஆணையை எதிர்த்து தலைநகர் ஒட்டாவாவை முற்று கையிட்டு கடந்த வாரம் முதல் ஆயிரக்கணக்கானோர் போராடி வருகின்றனர்.

இந்நிலையில் இவ்வார இறுதியில் போராட்டங்கள் மீண்டும் வலுவடையக் கூடும் என ஒட்டாவா நகர தலைமை பொலிஸ் அதிகாரி பீட்டர் ஸ்லோலி எச்சரித்துள்ளார்.

போராட்டக்காரர்கள் மீண்டும் எல்லை மீறினால் அவர்களை பொலிஸாரால் மட்டும் சமாளிக்க முடியாது எனவும் அவர் கருத்து வெளியிட்டார்.

எனினும் பாராளுமன்றம் அதன் சூழல் உள்ளிட்ட பகுதிகளை முற்றுகையிட்டுள்ள போராட்டக்காரர்களை அகற்ற இராணுவத்தின் உதவி கோரும் முறையான கோரிக்கைகள் எதுவும் அரசாங்கத்துக்கு இதுவரை கிடைக்கவில்லை என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.

போராட்டங்களைக் கைவிடுமாறு போராட்டக்காரர்களிடம் பிரதமர் கோரிக்கை விடுத்தார். எனினும் போராடி வரும் சரக்கு வாகன சாரதிகளைச் சந்திக்க ட்ரூடோ மறுத்துவிட்டார்.

இதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்களால் ஏற்படும் சிரமங்கள் குறித்து ஒட்டாவா குடியிருப்பாளர்கள் விரக்தியை வெளிப்படுத்தி வருகின்றனர். கடுமையான சத்தம், வர்த்தக நடவடிக்கை மற்றும் பொது சேவைகளில் அவர்களால் ஏற்படும் பாதகமான தாக்கம் மற்றும் கட்டுக்கடங்காத, ஆக்ரோஷமான நடத்தைகள் குறித்து குடியிருப்பாளர்கள் முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வாகனங்களில் அதிக ஒலியெடுப்புதல், விதிகளை மீறுதல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபடும் போராட்டக்காரர்களுக்கு தண்டம் விதிக்கும் செயற்பாடுகளை ஒட்டாவா பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

கனேடிய மத்திய அரசாங்கம் பிறப்பித்த கட்டாய தடுப்பூசி ஆணைக்கு எதிராக கடந்த ஜனவரி 15 ஆம் திகதி முதல் சரக்கு வாகன சாரதிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் கடந்த வாரம் முதல் அவர்கள் தலைநகர் ஒட்டாவாவை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நைஜீரியாவில் எண்ணெய் கப்பல் திடீரென்று வெடித்துச் சிதறியது!

அபுஜா, பெப். 05

நைஜீரியாவில் எண்ணெய் கப்பல் திடீரென வெடித்துச் சிதறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நைஜீரியாவின் தென்மேற்கிலுள்ள நைஜர் டெல்டா பகுதியில் எண்ணெய் வயல் உள்ளது. இந்த பகுதியில் ஷேபா ஆய்வு மற்றும் உற்பத்தி நிறுவனத்துக்கு சொந்தமான மிதக்கும் எண்ணெய் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்கும் கப்பல் நிறுத்தப்பட்டிருந்தது.

2 மில்லியன் பீப்பாய்கள் வரை எண்ணெய் சேமித்து வைக்கும் திறன் கொண்ட அந்த டிரினிட்டி ஸ்பிரிட் என்ற கப்பல் நேற்று முன்தினம் காலையில் திடீரென வெடித்துச் சிதறியது. இதனால் கப்பல் தீப்பிடித்து, கரும்புகை வெளியேறியது. கப்பலில் இருந்த ஊழியர்களின் நிலை என்னவென்பது தெரியவில்லை. சம்பவத்தில் உயிரிழப்பு ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

விபத்து ஏற்பட்டபோது 10 ஊழியர்கள் கப்பலில் இருந்ததாக ஷேபா நிறுவன தலைமைச் செயல் அதிகாரி தெரிவித்துள்ளார். தீயை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விபத்துக்கான காரணம் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த விபத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விபரங்கள் உடனடியாகத் தெரியவில்லை. கப்பல் தீப்பிடித்து எரியும் காட்சி மற்றும் அதிலிருந்து கரும்புகை எழுந்ததை கரையில் இருந்த ஊழியர்கள் மற்றும் மீனவர்கள் பீதியுடன் பார்ப்பதுபோன்ற வீடியோக்கள் வெளியாகி உள்ளன. (அ)

# கொரோனா வைரஸுடன் ஐரோப்பா ‘போர் நிறுத்தம்’!

## நிரந்தர அமைதிக்கு வழி கிட்டும் என்கிறது உலக சுகநல அமைப்பு

நியூயோர்க், பெப். 05

“கொரோனா வைரஸுடன் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகச் சுகாதாரப் போர் புரிந்து வந்த ஐரோப்பிய நாடுகள் ஒரு ‘போர் நிறுத்த’ காலப்பகுதிக்குள் பிரவேசித்துள்ளன. அது நிரந்தரமான அமைதி- ஆறுதலை - நோக்கி நம்மை அழைத்துச் செல்லும்.”

உலக சுகாதார நிறுவனத்தின் உயர் அதி காரி ஒருவர் இவ்வாறு நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

டென்மார்க் ஐரோப்பாவில் முதலாவது நாடாக கோவிட் கட்டுப்பாடுகள் அனைத் தையும் நீக்கியது. தொடர்ந்து நோர்வே சுவீடன், சுவிற்சர்லாந்து எனப் பல நாடு களும் மாஸ்க் முதற்கொண்டு சகல சுகா தார விதிகளையும் முடிவுக்குக் கொண்டுவருகின்றன.

இதனையே தொற்று நோயுடன் போர் நிறுத்தம் என்று உலக சுகா தார நிறுவ னத்தின் ஐரோப்பியப் பிரிவின் பணிப் பாளர் ஹான்ஸ் குளுகே வர்ணித்திருக்கிறார். அதி உச்ச அளவிலான தடுப்பூசி, பனிக் காலத்தின் முடிவு ஒமைக்ரோன் திரிபின் மென்மையான தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அவர் ஓர் ‘ஆறுதலான காலம் உருவாகும்’ என்ற நம்பிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

ஐரோப்பா எங்கும் கடந்த வாரம் 12 மில்லியன் புதிய தொற்றுக்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அவசர சிகிச்சை பெற வேண்டியோரின் எண்ணிக்கையில் ஒரு துளி கூட அதிகரிப்பு அவதானிக்கப்படவில்லை. ஒமைக்ரோன் வைரஸ் திரிபின் மென்வலுவே அதற்குக் காரணமாகும் என்று கூறுகின்ற மருத்துவ நிபுணர்கள், தொற்று நோய்க்கு எதிரான போரில் ஒரு போர் நிறுத்தம் உருவாக ஒமைக்ரோன் வழி வகுத்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். (அ)



## உஸ்பெகிஸ்தான் வனவிலங்கு பூங்காவில் குழந்தையை கரடியிடம் வீசினார் தாயார்!

ராஸ்கெண்ட், பெப். 05

வனவிலங்குப் பூங்காவில் குழந்தையை கரடியிடம் வீசிய தாயை பொலிஸார் கைது செய்தனர்.

இந்த கொடூரமான சம்பவம் வீடியோ கேமராவில் பதிவாகியுள்ளது. உஸ்பெகிஸ்தானில் உள்ள ஒரு வன விலங்குப் பூங்காவில் அந்தத் தாய் குழந்தையை தூக்கி 16 அடி பள்ளத்தில் இருந்த கரடியின் குகை நோக்கி வீசியெறிந்தாள்.

அங்கிருந்தவர்கள் இதனால் அதிர்ச்சியடைந்து நின்றனர். இரை போட்டதாக நினைத்து ஓடி வந்த சூசூ என்ற அந்தக் கரடி குழந்தையை மோப்பம் பார்த்து நகர்ந்து விட்டதால் குழந்தை உயிர் தப்பியது.

பூங்கா ஊழியர்கள் உடனடியாக கரடியை குழந்தையை மீண்டும் நெருங்கவிடாமல் கூண்டில் அடைத்து குழந்தையை மீட்டனர். (அ)



## 24 ஆண்டுகளுக்கு பின்னர் பாகிஸ்தான் செல்கிறது ஆஸி.!

சிட்னி, பெப். 05

1998ஆம் ஆண்டுக்கு பின்னர் முதன்முறையாக அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு செல்வதை அந்த நாட்டு கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

அங்கு செல்லும் அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 3 ஒருநாள், ஒரேயோர் இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இந்தப் பயணத்தில் பங்கேற்பதற்கு அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் தலைமையிலான பெரும்பாலான வீரர்கள் தயாராகவுள்ளனர்.

அடுத்த வாரத்தின் ஆரம்பத்தில் அவுஸ்திரேலியா பாகிஸ்தான் செல்லவுள்ள அணியை அறிவிக்கும். அத்துடன், 2019 ஆஷஷ் தொடருக்குப் பின்னர் அவுஸ்திரேலியா பங்கேற்கும் முதல் வெளிநாட்டு தொடர் இதுவாகும்.

இதேவேளை, ஏப்ரல் 5ஆம் திகதி வரை போட்டிகள் நடைபெறவுள்ளமையால் மார்ச் 27ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ. பி. எல்லின் முதல் சில போட்டிகளில் ஆஸியின் சில வீரர்கள் பங்கேற்காமல் போகலாம் என்று கூறப்படுகின்றது. (ஐ)



## பாகிஸ்தான் வீரருக்கு பந்துவீசுவதற்கு தடை!

லாகூர், பெப். 05

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஹூஸ்னைன் தவறான முறையில் பந்துவீசியதாக கண்டறியப்பட்டமையால் அவர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீசுவதில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டாரென பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

21 வயதாகும் முகமது ஹூஸ்னைன் கரீபியன் பிறீமியர் லீக்கில் (சி. பி. எல்) மணிக்கு 155 கி. மீ. வேகத்தில் பந்து வீசினார், சிட்னி ஸ்ரேடியத்தில் சிட்னி தண்டர் மற்றும் அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் இடையேயான பிக் பாஷ் லீக் போட்டியில் பந்துவீசிய போது நடுவர் ஜெரார்ட் அபூட், ஹூஸ்னைன் தவறான முறையில் பந்து வீசுவதாக அறிவித்தார்.

இதையடுத்து கடந்த ஜனவரி 19ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் ஹூஸ்னைன் தனது பந்துவீச்சு சோதனைக்கு உட்படுத்தப்பட இருந்தார். ஆனால், பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் விளையாடுவதற்காக பாகிஸ்தானுக்கு திரும்ப வேண்டியிருந்ததால், லாகூரில் உள்ள ஐ. சி. சியால் அங்கீகரிக்கப்பட்ட சோதனை மையத்தில் அவர் சோதனை செய்யப்படுவார் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் சோதனை ஆய்வகத்தால் ஹஸ்னைனின் பந்து வீச்சு முறையற்றது என்று கண்டறியப்பட்டது என்று தெரிவித்துள்ளது. ஹூஸ்னைன் பந்தை விடுவிக்கும்போது அவர் தன் கை முட்டியை மடக்குவது என்பது தேவையான 15 டிகிரி வரம்பை மீறுவதாக தெரிவித்துள்ளது.

மேலும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஹூஸ்னைனுக்கு ஒரு பந்துவீச்சு ஆலோசகரை நியமிக்கும் என்றும் இதனால் அவர் தனது பந்துவீச்சை சரிசெய்து மறுமதிப்பீட்டிற்கு தயாராக முடியும் என்று கூறியுள்ளது. அவர் பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் தொடர்ந்து பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார் என்றும் கூறியுள்ளது.

## இளையோர் உலகக் கிண்ணம்:
# பாகிஸ்தான் அணியிடம் இலங்கை படுதோல்வி!

அன்டிகுவா, பெப். 05

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி 238 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்தது.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ண இருபது - 20 போட்டி மேற்கிந்தியத் தீவுகளில் நடக்கிறது. இதில், வியாழக்கிழமை அன்டிகுாவில் நடந்த போட்டியில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் துனித் வெல்லாகே வென்று களத்தடுப்பை தெரிவு செய்தார்.
துடுப்பாட்டத்துக்கு சாதனமான ஆடுகளத்தில் முதல் தெரிவாக களத் தடுப்பைத் தெரிவு செய்தமை விமர்சனத்துக்குள்ளானது.

இந்த நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 50 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 365 ஓட்டங்களைக் குவித்தது. முஹமது ஷேஸாத், ஹசீபுல்லா கான் ஆகிய இருவரும் 24.1 ஓவர்களில் 134 ஓட்டங்களைப் பகிர்ந்து வலுவான ஆரம்பத்தை ஏற்படுத்தினர்.

ஷேஸாத் 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின்னர் ஹசீபுல்லாவும் கசிம் அக்ரமும் 2ஆவது விக்கெட்டுக்காக 229 ஓட்டங்களைப் பகிர்ந்து இந்த வருட உலகக் கிண்ணப் போட்டிக்கான அதிகூடிய இணைப்பாட்ட சாதனையை ஏற்படுத்தினர். அத்துடன், 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ண வரலாற்றில் 6ஆவது சிறந்த இணைப்பாட்டமாகவும் அது பதிவானது.




அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய கசிம் அக்ரம் 80 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 13 பௌண்ட்ரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக 135 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். ஹசீபுல்லா கான் 9 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 136 ஓட்டங்களைக் குவித்தார்.

இதனால், பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 365 ஓட்டங்களைக் குவித்தது.

பாகிஸ்தானின் விக்கெட்களை வீழ்த்த இலங்கையின் தலைவர் 8 பந்துவீச்சாளர்களை பயன்படுத்தினார். ஆனால், அவர்களால் பாகிஸ்தான் வீரர்களை கட்டுப்படுத்த முடியவில்லை. மதீஷ பத்திரண 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

366 என்ற கடினமான இலக்கை விரட்டிய இலங்கை அணி 34.2 ஓவர்களில் 127 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இலங்கை அணி 17ஆவது ஓவரில் 7ஆவது விக்கெட்டை இழந்த போது வெறும் 55 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அணித் தலைவர் துனித் வெல்லாகே, பின்வரிசை வீரர் வினுஜ ரன்புல் ஆகிய இருவரும் 8 ஆவது விக்கெட்டுக்காக 50 ஓட்டங்களைப் பகிர்ந்ததால் இலங்கையின் மொத்த எண்ணிக்கை 100 ஓட்டங்களைக் கடந்தது.

வெல்லாகே 40 ஓட்டங்களையும் ரன்புல் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும் பெற்றனர். பாகிஸ்தான் பந்துவீச்சில் கசிம் அக்ரம் 37 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

தொடரின் முடிவில் பாகிஸ்தான் அணி 5ஆம் இடத்தையும், இலங்கை அணி 6ஆம் இடத்தையும் பெற்றுள்ளன. (ஐ)

## ரூ. 15 கோடி வேண்டாம் ரூ. 8 கோடியே போதும்!
### சஹால் சொல்கிறார்

சென்னை, பெப். 05

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் (ஆர். சி. பி.) அணியில் மீண்டும் இடம்பெற வேண்டும் என்று பிரபல வீரரான சஹால் தெரிவித்துள்ளார்.

31 வயதான சஹால், இந்திய அணிக்காக 2016ஆம் ஆண்டு முதல் 59 ஒருநாள், 50 டி20 போட்டிகளில் விளையாடியுள்ளார். 2014 முதல் ஆர். சி. பி. அணியில் விளையாடியுள்ளார். ஆர். சி. பி. அணிக்காக 113 போட்டிகளில் விளையாடி 138 விக்கெட்கள் எடுத்துள்ளார்.

இவர் கிரிக்கெட் வீரர் அஸ்வினின் யூ - ரியூப் சனலுக்கு சஹால் அளித்த பேட்டியில் கூறியதாவது:

ஐ. பி. எல். ஏலத்தில் எனக்கு ரூ. 15 கோடி கிடைக்க வேண்டும் எனக் கூறமாட்டேன். ரூ. 8 கோடியே எனக்குப் போதுமானது. விராட் கோலி எனக்கு மூத்தவர். ஆர். சி. பியில் நான் இருந்த 8 வருடங்களும் எங்களிடையே அருமையான சகோதர பாசம் நிலவியது. மைதானத்தில் மட்டுமல்ல அதன் வெளியேயும் அவரிடம் என்னால் என்ன வேண்டுமானாலும் கேட்க முடியும். அந்த நட்பால் அவரின் தலைமையின் கீழ் என்னால் சிறப்பாகப் பந்து வீச முடிந்தது.

ஆர். சி. பி. அணியில் விளையாடிய கடந்த 8 வருடங்களும் மறக்க முடியாதவை. இந்தமுறை என்னை எந்த அணி வேண்டுமானாலும் தேர்வு செய்யலாம். ஒரு தொழில்முறை வீரராக எந்த அணியிலும் விளையாட நான் தயாராக இருக்க வேண்டும். ஆர். சி. பி. அணிக்கு மீண்டும் செல்ல விருப்பப்படுகிறேன். ஆனால், வேறோர் அணி என்னைத் தேர்வு செய்தால் அதற்காக நான் வருத்தப்பட மாட்டேன் - என்றார். (ஐ)

## மகளிர் ஆஷஷ் கிண்ணம் தக்கவைத்தது ஆஸி. அணி

கன்பெரா, பெப். 05

பெண்களுக்கான ஆஷஷ் தொடரில் இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியா 27 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் ஆஸ்திரேலிய மகளிர் அணி ஆஷஷ் கிண்ணத்தைத் தக்கவைத்துக் கொண்டது.

கன்பெராவில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முத லில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 205 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்து ஆடிய இங்கிலாந்து 45 ஓவர்களில் 178 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் ஆட்டமிழந்தது.

மகளிர் ஆஷஷ் தொடர் இருபது - 20, டெஸ்ட், ஒருநாள் மூன்று கிரிக்கெட் வடிவ போட்டிகளையும் உள்ளடக்கியதாக நடைபெறுகிறது.

நடப்பு ஆஷஷ் தொடர் 3 இருபது - 20 ஆட்டங்கள், ஒரு டெஸ்ட் போட்டி, 3 ஒருநாள் போட்டிகள் நடக்கின்றன.

முதல் இருபது - 20 போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது. இரண்டாவது போட்டி மழையால் முடிவின்றிக் கைவிடப்பட்டது. மூன்றாவது போட்டி கைவிடப்பட்டது. டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இதைத் தொடர்ந்து முதல் ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

இதன் மூலம் நடப்பு ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியா 8 - 4 என்ற புள்ளிகள் கணக்கில் முன்னிலை பெற்றது. எஞ்சிய இரு ஒருநாள் ஆட்டங்களில் இங்கிலாந்து வென்றாலும் தொடரை சமன் செய்யமுடியுமே தவிர, தொடரை வெற்றி பெற முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2013-14ஆம் ஆண்டு முதல் ஆஷஷ் கிண்ணம் அவுஸ்திரேலிய மகளிர் வசமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எமக்கு உள்ள பொறுப்புகளை மறந்துவிட்டு உரிமைகளை மட்டும் பேசுவது உகந்ததல்ல!

## சுதந்திர தின உரையில் ஜனாதிபதி



கொழும்பு, பெப். 05

பெற்றுக்கொண்ட சுதந்திரத்தின் உயர்ந்தபட்ச பலனை அடைவதற்கு, அனைவரும் நாட்டுக்கான தமது பொறுப்புகளை நிறைவேற்றவேண்டு மென்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

சுதந்திரமானதும் ஜனநாயகமானதுமான நாட்டின் மக்களுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளன. அது போன்றே, பொறுப்புகளும் உள்ளன என்றும் எடுத்துரைத்த ஜனாதிபதி , அந்தப் பொறுப்புகளை மறந்து உரிமைகள் பற்றி மாத்திரம் பேசுவது உகந்ததல்ல என்றும் குறிப்பிட்டார்.

நேற்று முற்பகல், கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற 74ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்டு தேசத்துக்காக உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சுதந்திரமான ஒரு நாட்டின் கௌரவம்மிக்க ஒரு பிரஜையாக வாழ்வதற்குள்ள உரிமையை முன்னிட்டு, வரலாறு முழுவதும் பல நாடுகளின் மக்கள் கலவரங்களை நடத்தியுள்ளார்கள். போர்களை முன்னெடுத்துள்ளார்கள். பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளார்கள்.

இலங்கையிலும், 2,500 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றின் பல காலப்பகுதிகளில், வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடிய துட்டகைமுனு, வலகம்பா, மஹா பராக்கிரமபாகு, விஜயபாகு, ஆறாவது பராக்கிரமபாகு போன்ற சிறந்த மன்னர்கள் வெளிநாட்டவர்களிடமிருந்து நாட்டை மீட்டு நாட்டை ஒன்றுபடுத்தினார்கள்.

இறுதியாக, ஏறத்தாழ 450 ஆண்டு காலமாக இருந்து வந்த ஐரோப்பிய காலனித்துவ ஆட்சிகளிலிருந்து எமது நாடு சுதந்திரம் பெற்று தற்போது 74 ஆண்டுகள் கடந்துள்ளன. சுதந்திரத்தின் பின்னரும்கூட 3 தசாப்தங்களுக்குக் கிட்டிய காலத்தில் பயங்கரவாதச் செயபாடொன்றினூடாக இந்நாட்டை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க முயன்றமைக்கு எதிராகப் போராடவும் எமக்கு நேர்ந்து விட்டது.

இன்று இலங்கையானது ஒரு சுதந்திரமான இறைமை பொருந்திய ஜனநாயக நாடாகும். நாம் அதன் அபிமானம் கொண்ட பிரஜைகளாவோம்.

வரலாறு முழுவதும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு எமது நாட்டுக்கு முழுச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், அர்ப்பணிப்புடன் முன்னின்ற நாட்டுப் பற்றுடையவர்கள் எல்லோருக்கும் நான் இவ்வேளையில் எனது மரியாதையைச் செலுத்துகின்றேன்.

இனம், மதம் என்ற எவ்வித பேதங்களுமின்றி ஒவ்வோர் இலங்கைப் பிரஜைக்கும் இன்று நாட்டின் எப்பிரதேசத்திலும் சுதந்திரமாகவும் பாதுகாப்புடன் வாழும் உரிமையுண்டு. தாம் விரும்பும் மதத்தை வழிபடுவதற்கான சுதந்திரமும் உள்ளது.

எல்லோரும் நாட்டுக்காகத் தமது பொறுப்புகளை நிறைவேற்றும் போதுதான் கிடைத்த சுதந்திரத்தின் உச்சகட்டப் பயன் கிடைக்கும். பொறுப்புகளை மறந்துவிட்டு உரிமைகளைப் பற்றி மட்டும் பேசுவது பொருத்தமாக இருக்காது.

ஒரு நாடானது, சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய சகல அம்சங்களினாலும் வலுவடையும் போதே, அந்நாட்டின் சுதந்திரமானது மிக அர்த்தமுள்ளதாக அமைகிறது. அதற்காக முனைப்பாகப் பங்களிக்கும் சந்தர்ப்பம் அரசைப் போன்று மக்களுக்கும் உள்ளது.

ஒரு நாட்டை உரிய திசையை நோக்கிக் கொண்டு செல்லும் போது, அதற்காக நாட்டின் அனைவரது உதவியையும் எதிர்பார்க்க முடியாது என்பதை நாம் அறிவோம். மாற்றமடையாதோருக்காகக் காத்திருந்து நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்காக நாம் திட்டமிட்டுள்ளவற்றைக் கைவிட நாம் தயாரில்லை. எமது நோக்கமானது நாடு சார்பில் சரியானதைச் செய்வதே தவிர எல்லோரையும் திருப்திப்படுத்துவதல்ல.

ஒரு நாட்டின் தலைவர், அநேகமான கஷ்டங்கள், அனர்த்தங்கள், பிரச்னைகள் மற்றும் சவால்களைத் தொடர்ந்து எதிர்கொள்ள நேரிடுகிறது. ஒரே நோக்கை நோக்கிக் குழுவொன்றை வழிநடத்துவது இலகுவானதல்ல. எவ்வளவு நல்ல நோக்கமாக இருப்பினும், நடைமுறையில் இருக்கின்ற முறைமைகளை மாற்றுவது இலகுவானதல்ல. சில விடயங்களில், உள்நாட்டைப் போன்று அந்நிய சக்திகளும் எம்மை எதிர்த்து ஒன்று கூடுகின்றன. சிலவேளை உங்களது பக்கத்தில் நிகழும் செயல்கள் எல்லாம் உங்களுக்கு எதிராக நடக்கும் சதியாகத் தோன்றும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

மக்கள் தலைவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது அனைத்துப் பிரச்னைகளையும் முகாமைத்துவம் செய்துகொண்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதே தவிர பிரச்னைகளிலிருந்து தப்பி ஓடுவதல்ல. அதற்குத் தேவையான ஆக்கமுறையான உளப்பாங்கு எம்முள் இருக்கின்றது. நாடு எதிர்கொள்கின்ற எந்தவொரு சவாலையும் வெற்றிகாண்பதற்காகத் தலைமைதாங்க நான் எப்பொழுதும் தயாராக இருக்கின்றேன்.

ஆக்கமுறையான கருத்துகளை கொண்டுள்ள, எதிர்காலம்பற்றிய நல்ல கனவுகளைக் கண்டு அவற்றை அடைய முயன்றவர்கள்தான் உலகை மாற்றியிருக்கிறார்கள். வரலாறு முழுவதிலிருந்தும் இது நமக்குத் தென்படுகிறது. நாட்டுத் தலைவருக்கும் மக்களுக்கும் இருக்கும் ஆக்க முறையான சிந்தனையே, முன்னேறிய ஒவ்வொரு நாட்டினதும் உயர்வுக்குக் காரணமாகியுள்ளது.

புராதன காலத்திலிருந்த எமது மன்னர்கள், ருவன்வெலிசாய, ஜேத்தவனாராமய மற்றும் அபயகிரி போன்ற விசாலமான நிர்மாணங்களை, ஆக்க முறையான சிந்தனைகளின் மூலம் தான் செய்தார்கள். மின்னேரியா குளம், கலா வாவி, பராக்கிரம சமுத்திரம் மற்றும் யோத எல போன்ற நிர்மாணங்களைச் செய்த தலைசிறந்த நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் அன்று எமக்கு இருந்தது. சீகிரியா போன்ற நகர நிர்மாணிப்புகள் இன்றும் உலகை ஆச்சரியப்படுத்துகின்றன. இலங்கையானது, பண்டைய கால உலகின் பகிரங்கமானதொரு கப்பல் மையமாக இருந்தது.

அன்று எமக்கு அப்படியானவற்றைச் செய்யும் இயலுமை இருந்திருந்தால் வருங்காலத்திலும் உலகுடன் போட்டியிடும் ஆற்றல் நமக்கு இருக்க வேண்டும். அதற்கு இன்றியமையாத காரணியாக அமைவது நாம் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கைதான்.

அண்மைக்கால வரலாற்றில் நாம் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டுள்ளோம். பயங்கரவாதத்தை ஒருபோதும் போரினால் தோற்கடிக்க முடியாதென்று அன்று பூரண எதிர்மறை சிந்தனையை கொண்டுள்ளவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தபோது, ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, ஜெனரல் விஜய விமலரத்ன போன்ற இராணுவத் தலைவர்கள், பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க முடியுமென்ற ஆக்கமுறையான சிந்தனையை அவர்களின் கீழ் போராடிக் கொண்டிருந்த இராணுவ உத்தியோகத்தருக்குள் ஊடுருவச் செய்தனர்.

பிற்காலத்தில் சீரான அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் சுமார் மூன்றரை ஆண்டளவான குறுகிய காலத்தினுள் பயங்கரவாதத்தை முற்றுமுழுதாகத் தோற்கடிப்பதற்காக எமது ஆற்றல்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையே காரணமானது.

நாம் தற்காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்னைகள் எவையும் நீண்டகாலப் பிரச்னைகள் அல்ல. ஆக்கமுறையுடன் கூடிய ஓர் அணுகுமுறையினூடாக எமக்கு இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடிக் கொள்ள முடியும். ஆயினும், அந்த வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்திக் கொள்வதற்காக நாம் அனைவரும் செய்ய வேண்டிய வேலைப்பகுதி உள்ளது. தத்தமது பொறுப்பை உரியவாறு நிறைவேற்றுவதன் மூலம் நாம் அனைவரும் நாடு சார்பாக எமது உச்சகட்டப் பங்களிப்பை வழங்க முயலவேண்டும்.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்னைகளுக்கான காரணங்களைத் தேடிக்கொண்டு பல வருடங்கள் பின்னோக்கிச் செல்வதைவிட, அதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட காலத் தீர்வுகளைக் கண்டறிவதே காலோசிதமானதாகும். ஓர் அரசு என்ற வகையில் நாம் அதன்மீது கவனத்தைச் செலுத் தியுள்ளோம். எமது நாட்டின் அபிவிருத் திச் செயல்பாடுகளின் போது முதலீடுகள் முக்கிய காரணியாக அமைந்திருக்கின்றன. முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு அரசு எப்பொழுதும் நடவடிக்கை எடுப்பதுடன், உள்நாட்டு முதலீடுகளைப் போல சர்வதேச முதலீடுகளும் அவசியமாகின்றன. விசேடமாக, பாரியளவிலான கருத்திட்டங்கள், நவீன தொழில்நுட்ப அறிவு தேவைப்படும் கைத்தொழில்கள், உலகச் சந்தைக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும் புதிய வியாபாரங்களுக்கு சர்வதேச முதலீடுகள் தேவைப்படுகின்றன. அதற்காக, அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிராகத் தவறான அபிப்பிராயங்களை மக்களிடம் கொண்டு செல்லும் தரப்பினர் பற்றி மக்கள் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்.

மிகவும் பயனுறுதியான ஒரு பிரஜையை உருவாக்குவதற்காகப் பல முறையான கல்வித் திருத்தங்கள் இப்போது நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பாடசாலைக் கல்வியை முடித்துவிடும் ஒவ்வொரு பிள்ளையும், நாட்டின் பொருளாதாரச் செயல்பாட்டில் பங்களிக்கக்கூடிய தொழிலையோ அல்லது கைத்தொழிலையோ பயிலவேண்டும். தாம் தெரிந்துகொண்ட துறையில் தனது அறிவைக் கூட்டிக்கொள்வது போன்று, முடியுமானால் தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் முயற்சிக்க வேண்டும். அதனூடாக நாட்டின் பொருளாதாரச் செயல்பாட்டில் நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கின்றது.

விவசாயப் பண்ணையில், தொழிற்சாலையில், வேலைத் தளமொன்றில் வியர்வை சிந்தி வேலை செய்யும் மக்கள், நாட்டின் பொருளாதாரத்தில் நேரடிப் பங்களிப்பை வழங்குகின்றனர். அவர்கள் எல்லோரையும் நான் கௌரவிக்கின்றேன்.

நாட்டுக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் எமக்குப் பெரிய வளமாக இருக்கின்றார்கள். கடந்த காலத்தில் அவர்கள் நாட்டுக்காக முன்வந்து பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்து எமக்கு ஒத்துழைப்பு நல்கியதை நாம் மறக்கவில்லை. எம் முன்னிலையில் உள்ள சவால்களை வெற்றிகொண்டு, எமது வருங்காலக் குறிக்கோள்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதாயின், நாம் எல்லோரும் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. நம் எல்லோருக்கும் அதற்காகச் சில அர்ப்பணிப்புகளைச் செய்ய நேரிடலாம். அதற்குத் தேவையான எடுத்துக்காட்டுதலைத் தருவதற்கு நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் நான் தயாராக இருக்கின்றேன்.

தற்போதும் நான் அதனை உச்சக்கட்டத்தில் செய்து கொண்டிருக்கின்றேன். எல்லா அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரசியல்வாதிகள் ஆகிய அனைவரும் நாட்டுக்கு முன்மாதிரியாக எப்போதும் செயற்பட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கின்றேன். நீங்கள் மக்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்வீர்களாயின், நாட்டின் பெரும்பாலான மக்களும் உங்களைப் பின்பற்றுவார்கள்.

கலாசாரச் சுதந்திரம் ஒவ்வோர் இனத்துக்கும் முக்கியமானது. ஆயிரம் வருடகால வரலாற்றைக் கொண்ட பாரம்பரிய சம்பிரதாயங்கள், விழுமியங்கள் மற்றும் எமது பண்புகளைப் பாதுகாத்தல் என்பவற்றை எமது அடிப்படைப் பொறுப்பாகக் கருதுகின்றோம். கடந்த காலத்தில் பல அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி அழிந்து கொண்டிருந்த தொல்பொருள் பெறுமதிமிக்க இடங்களைப் பாதுகாத்து அவற்றை மேம்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

எமது நாடு சட்ட ஆதிக்கத்தைப் பாதுகாக்கும், சர்வதேச சமவாயங்களை மதிக்கும் நாடொன்றாகும். குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்குப் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சார்த்துவதற்கு ஏதேனுமொரு தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்ட போதும், எவ்விதத்திலும் மனித உரிமை மீறல்களுக்கு அரசு உடந்தையாக இருக்கவில்லை என்பதுடன், எதிர்காலத்திலும் அத்தகைய நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு இடமளிக்கவும் மாட்டாது. சுதந்திரத்தின் உண்மையான அர்த்தத்தை எய்திய அபிமான மிக்க தேசத்தைக் கட்டியெழுப் புவதற்காக ஒன்றுசேருமாறு அனைத்து நாட்டுப் பற்றுள்ள இலங்கையர்களுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன்-என்றார். (அ)



## போராட்டங்களால்...

முள்ளிவாய்க்கால், யாழ்ப்பாண மாநகரம் கறுப்புக் கொடிகளுடனும் கறுப்பு உடைகளுடனும் போராட்டங்களை முன்னெடுத்தனர். இதேசமயம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கறுப்புக் கொடி கட்டப்பட்டு சுதந்திரநாள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள், சிவில் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்காலில் பேரணியும் யாழ்ப்பாணம் மாநகரில் ஆர்ப்பாட்டமும் இடம்பெற்ற அதேசமயம், பருத்தித்துறையில் மீனவர்கள் இந்திய அத்துமீறல்களை கண்டித்து கறுப்புக் கொடிகளை ஏந்திப் போராட்டங்களை நடத்தினர்.

**முள்ளிவாய்க்காலில்...!**

'ஸ்ரீலங்கா சுதந்திர நாள் தமிழ் தேசத்தின் கரிநாள்' என்ற கோஷத்துடன் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தில் ஆரம்பமான போராட்டம் செல்வபுரம் புனித யூதா தேவாலயத்தில் நிறைவடைந்தது.

தமிழின அழிப்பின்போது கொல்லப்பட்ட மக்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தில் சுடர் ஏற்றி ஆரம்பமான மக்களின் பேரணி பிரதான வீதியை அடைந்து வட்டுவாகல் பாலம் நோக்கி நகர்ந்தது. இதன்போது பாலத்துக்கு அண்மையாக உள்ள கோட்டாபய கடற்படை முகாமுக்கு நின்ற போராட்டக்காரர்கள், "சர்வதேச விசாரணை வேண்டும்", "எமது கடல் எமக்கு வேண்டும்", "வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்", "எங்கே எங்கே உறவுகள் எங்கே", "இன அழிப்பும் கொடூர யுத்தமும் முடிந்த பிற்பாடு கையளிக்கப்பட்ட உறவுகள் எங்கே" என்று உரத்த குரலில் கோஷமிட்டனர்.

தொடர்ந்து கோஷமிட்டவாறு வட்டுவாகல் பாலத்தை அடைந்தவர்கள் கைகளில் தீப்பந்தம் ஏந்தியவாறும் கடந்தனர். பாலத்தின் முடிவு இடத்திலும் சிறிது நேரம் நின்று போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர். இந்த இடத்திலேயே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இறுதிப் போர் முடிவுக்கு வந்தபோது 2009 மே மாதத்தில் தங்கள் உறவுகளை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர். இதனை நினைவுகூரும் முகமாகவே அந்த இடத்திலும் போராட்ட கோஷங்களை எழுப்பினர்.

தொடர்ந்து செல்வாபுரத்தை சென்றடைந்தவர்கள் புனித யூதா தேவாலயத்தில் பேரணியை நிறைவு செய்தனர்.

**யாழ்ப்பாணத்தில்...!**

யாழ்ப்பாணம் முற்றவெளியில் கறுப்புக் கொடிகளுடன் நேற்றைய தினம் போராட்டம் இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

**யாழ். பல்கலையில்...!**

சுதந்திரநாளை கரிநாளாக அனுசரிக்க விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றும், பல்கலைக்கழகத்துக்குள் செல்வதற்கு மாணவர்களை அனுமதி மறுத்த நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பிரதான நுழைவாயிலில் கறுப்புக் கொடியை மாணவர்கள் கட்டினர்.

**பருத்தித்துறையில்...!**

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்தும் அதனைத் தடுக்காத கடற்படை மற்றும் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் பருத்தித்துறை மீனவர்கள் நேற்று கடலில் போராட்டம் நடத்தினர்.

கடந்த நான்கு நாட்களாக நடத்தப்பட்ட போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை உத்தரவு விதித்த நிலையில் மீனவர்கள் ஐந்தாவது நாளான நேற்று போராட்டத்தை கறுப்பு கொடிகளுடன் கடலில் நடத்தினர்.

**புலம்பெயர் தேசத்தில்...!**

புலம்பெயர் தேசங்களிலும் இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக போராட்டங்கள் இடம்பெற்றன.

லண்டன், பாரிஸ் நகரங்களில் இலங்கை தூதரகம் முன்பாகக் கூடியவர்கள் இலங்கையின் தேசியக் கொடியை எரியூட்டி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதேபோன்று, ஜேர்மனி, நெதர்லாந்து, இத்தாலி, பெல்ஜியம், சுவிஸ், கனடா ஆகிய நாடுகளிலும் எதிர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூட்டமைப்பு...

டன் தமிழ் விவசாயிகளை பயிர்ச் செய்கையில் ஈடுபடாமல் தடுத்து வருகிறார்.

இந்த நிலையில், தமிழ் மக்களுக்கு சுதந்திரம் இல்லை என்பதை நிரூபிக்கும் விதமாக சுதந்திர நாளில் குருந்தூர்மலைக்கு செல்லவுள்ளாதாக சுமந்திரன் எம். பி. அறிவித்திருந்தார்.

இதன்படி, நேற்றுக் காலை குருந்தூர் மலைக்கு சுமார் 75 பேர் வரையிலானோர் சென்றனர். அங்கு சென்றவர்களை இராணுவத்தினர் வழிமறித்திருக்கவில்லை. இதைத் தொடர்ந்து சிவன் ஆலயப் பகுதியில் அவர்கள் வழிபாடாற்றினர்.

இதன் பின்னர் அங்கு கருத்துத் தெரிவித்த சுமந்திரன் எம். பி., "உள்நாட்டு பொறிமுறையில் ஒரு தீர்வும் கிடைக்காது என காலாகாலமாக நாம் கூறி வருகிறோம். சுதந்திர தினமான இன்று எமது மத உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் தொடரும் நில ஆக்கிரமிப்பு தொடர்பாகவும் எதிர்ப்பை காண்பிக்கும் முகமாக குருந்தூர்மலைக்கு வந்துள்ளோம்", என்றார். (ஐ)

(தொடர்பான மற்றொரு செய்தி பக்கம் 6இல்)

## இந்திய மீனவர்...

இடத்துக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீனவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தார்.

அத்துமீறி நுழையும் மீனவர்களை கைது செய் வதற்கு கடற்படையின ருக்கு உத்தரவு விடக் கோரியும், 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இழுவை மடி தடைச் சட்டம் மற்றும் வெளிநாட்டுப் படகுகளுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தும் 2018ஆம் ஆண்டின் முதலாம் இலக்கச் சட்டம் ஆகியவற்றை நடைமுறைப் படுத்தக் கோரியும் உயர்நீதிமன்றில் மனு தாக்கல் செய்யவுள்ளதாகவும், அதற்கு வடக்கு மீனவர் சங்கங்களின் ஆதரவு வேண்டும் எனவும் அவர் மீனவர்கள் மத்தியில் குறிப்பிட்டார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்தும் விதமான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் தரப்புகளுக்கு தாம் எப்போதும் பூரண ஆதரவை வழங்குவோம் என மீனவர்கள் தெரிவித்தனர். (அ)

# யாழ்ப்பாணத்தில் 22 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், பெப். 05

யாழ்ப்பாணத்தின் ஆய்வுகூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் யாழ். போதனாவில் பெண்கள் 10 பேர் உட்பட 22 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடத்தில் யாழ். போதனா மருத்துவமனையிலிருந்து பெறப்பட்டிருந்த 62 பேரின் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியதில் 11 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். இதில் ஐவர் பெண்களாவர்.

இதேபோன்று யாழ். போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் அந்த மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட 70 பேரின் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியதில் 11 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதிலும், பெண்கள் ஐவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ஐ)

## வாழ்வுரிமைக்கே...

யுடன் நிறைவுக்கு வந்தது. இதன்போது அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர்கள், அதில் தெரிவித்தவை வருமாறு,

"வட பகுதி கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி வரும் இந்திய படகுகளால் கடல் வளம் அழிக்கப்பட்டு வருகிறது. எமது தொழில் வளங்களும் அழித்தும் சேதமாக்கப்பட்டும் வருவது தொடர்கதையாக நீடிக்கிறது. இந்தக் கையறு நிலையில்தான் மீனவ சமுதாயம் தன்னை வருத்தி இன்றுடன் (நேற்றுடன) 5 நாட்களாக தொழில் மறிப்பு மற்றும் தொடர் சாலை மறியல் போராட்டத்தை முன்னெடுத்து இருந்தோம்.

கடற்றொழிலுக்கு பொறுப்பான அமைச்சராக வட பகுதியை சேர்ந்த தமிழர் ஒருவர் பதவி வகிக்கும்நிலையில்தான் இந்தத் துயரம் நடந்தேறி வருகிறது. அமைச்சர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வடபகுதி மீனவர் சமுதாயம் இதற்கு நிரந்தர தீர்வு பெற்றுத் தருமாறு கோரி வந்துள்ளோம்.

நாம் கோருவது இலங்கைத்தீவின் வடக்கு கடற்பரப்பில் எல்லை மீறி நுழையும் இந்திய படகுகளை நிரந்தரமாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே. இந்தக் கோரிக்கையானது இலங்கையின் கடற்பரப்பின் மீதான இறையாண்மையை கடற்படை கட்டிக்காக்க வேண்டும் என்பதுடன், இதன் மூலம் வட பகுதி மீனவ சமுதாயத்தின் துயரத்திற்கு தீர்வையே வலியுறுத்தி நிற்கின்றது.

எமது நியாயமான கோரிக்கையை நிறைவேற்றும் உத்தரவாதத்தை தர முடியாத நிலையில் அமைச்சரால் எமது துயரத்துக்கு எவ்வாறு தீர்வைப் பெற்றுத்தர முடியும் என்ற கேள்வியை ஏற்படுத்தி உள்ளது. எனவே, இந்த விடயத்துக்குப் பொறுப்பானவர் என்ற வகையில் இந்தியப் படகுகளின் சட்டவிரோத உள்நுழைவை தடுக்க முடியாவிடில் பதவியில் அவர் தொடர்ந்து நீடிப்பது அர்த்தமில்லை என்பதே எமது நிலைப்பாடு.

இந்த நிலையில், எமது வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றோம். அரசியல் கட்சி பேதமின்றி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்த விடயத்தின் காத்திரத்தன்மையை உணர்ந்து நிரந்தர தீர்வைக்காணும் வகையில் செயல்படுமாறு வலியுறுத்துகின்றோம். கடல் நீரோடு நீராக கரைந்து காணாமலே போகும் மீன்களின் கண்ணீர் துளிகளாக வட பகுதி மீனவ சமுதாயத்தின் துயரமும் எமக்குள்ளாகவே கரைந்தோடும் அவலம் தொடர்கிறது. இந்தத் துயரத்திற்கு நிரந்தர தீர்வைப் பெற்று எமது வாழ்வாதாரத்தையும் உயிர்களையும் பாதுகாக்குமாறு விநயமாக வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது. (ஐ-2-3)

## தொற்று பலி...

வயதுக்கு மேற்பட்டவர்க ளில் 14 ஆண்கள், 11 பெண்கள் உட்பட 25 பேர் என மொத்தம் 29 பேர் உயிரிழந்தனர்.

இந்த மரணங்களின் எண்ணிக்கையுடன் நாடு முழுவதும் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 544ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## சுதந்திர...

கடந்த வருடம் நடை பெற்ற சுதந்திர தின நிகழ் வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் சுதந்திர தின நிகழ்வை புறக்கணித்துள்ளார். (அ)

## நிறைவுக்கு...

துக்கு நீதி கோரியும், இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்தும் கடந்த ஜனவரி 31 ஆம் திகதி தொடக்கம் வீதிகளை முடக்கியும் தொழிலைப் புறக்கணித்தும் பருத்தித்துறை - சுப்பர்மடம் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நான்கு நாட்கள் தொடர்ந்த இந்தப் போராட்டத்தால் யாழ். குடாநாட்டின் மாதகல் மற்றும் பொன்னாலை கரையோரப் பகுதிகள் வரை முடங்கின. அத்துடன், பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலகங்கள், யாழ்ப்பாணம் மாவட்டம் செயலகம் என்பவை முற்றுகைக்குள்ளாகியிருந்தன.

இந்த நிலையில், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் போராட்டத்துக்கு தடை விதித்த நிலையில் நேற்று கடலில் கறுப்புக் கொடிகளுடன் இறங்கிப் போராடிய மீனவர்கள் போராட்டத்தை நிறைவுக்குக் கொண்டுவந்ததுடன், அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தனர். (ஐ - 2)

## நாடளாவிய...

ராஜபக்ஷ அவரின் பாரியார், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், மாணவர்கள் எனப் பெருந்தொகையானோர் பங்கேற்றனர்.

முப்படை, சிவில் பாதுகாப்பு படைகளின் அணிவகுப்புக்களை ஜனாதிபதி உள்ளிட்டவர்கள் ஏற்றுக்கொண்டதுடன், சாகச நிகழ்வுகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.

அத்துடன், நேற்று நாட்டின் அனைத்து அரசாங்க திணைக்களங்கள், அலுவலகங்களிலும் தேசியக் கொடி ஏற்றி சுதந்திர தின நிகழ்வுகள் இடம் பெற்றன. நாடு முழுவதும் வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள், பொது இடங்கள், வீடுகளில் தேசியக் கொடி கட்டப்பட்டிருந்தன. அத்துடன், வழி பாட்டு தலங்களிலும் சிறப்பு வழி பாடுகளும் இடம்பெற்றன.

இதேவேளை, வடக்கு, கிழக்கு மக்கள் சுதந்திர தினத்தை கரிநாளாக கடைப்பிடித்ததுடன், பெரும்பாலான மக்கள் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வீதியில்...

உத்தரவு நேற்று முன்தினம் வழங்கப்பட்ட நிலையில் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கறுப்புக் கொடி போராட்டம் நேற்று அங்கு நடைபெற்றது.

இந்தியப் படகுகளின் அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டுவரும் வடபகுதி மீனவர்கள் ஒன்றிணைந்து ஒருங்கிணைக்கப்பட்ட வகையில் பருத்தித்துறை - சுப்பர்மடம் பகுதில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்துக்கு வடமராட்சி பிரதேச மீனவர்கள், மாதகல் பகுதி மீனவர்கள், அரசியல் தரப்பினர் மற்றும் பொது அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-02-03)

ஈழநாடு
Eelanadu

## யாழ். வணிகர் கழகத்துக்கு புதிய நிர்வாக சபை தெரிவு!

யாழ்ப்பாணம், பெப். 05

யாழ். வணிகர் கழகத்தின் தலைவராக ச. சிவகுமாரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். வணிகர் கழகத்தின் பொதுக்கூட்டம் கடந்த ஜனவரி 29ஆம் திகதி சனிக்கிழமை வணிகர் கழக பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே புதிய நிர்வாக சபை தெரிவு இடம்பெற்றது.

இதன்படி, வணிகர் கழகத்தின் தலைவராக ச. சிவகுமாரன், உபதலைவராக இ. ஜெயசேகரன், செயலாளராக ச. சிவலோகேசன், உப செயலாளராக ஜோ. செ. அலெக்ஸ் நிக்ஷன், பொருளாளராக செ. கஜன் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன், 16 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

## நூலக நிறுவனத்தின் இணையவழி நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 05

நூலக நிறுவனத்தால் நடத்தப்படும் இணைய வழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 28ஆவது நிகழ்வாக "இலத்திரனியல் மற்றும் எண்ணிமக் கல்வி: சவால்களும் வாய்ப்புகளும்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு (இலங்கை நேரம்) ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்த் கலந்துரையாடலில் வளவாளராக பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். கே. நவரட்ணராஜா கலந்துகொள்வார். நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராக நூலக நிறுவன ஆளுகை சபை உறுப்பினர் சுஜீவன் தர்மரத்தினம் செயல்படுவார்.

இந்தக் கலந்துரையாடலில் ஸூம் செயலி மூலம் 814 1558 4070 என்ற அடையாள எண் மூலம் சகலரும் இணைந்து பயன்பெற முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)










# திண்ம திரவ இயற்கை உர உற்பத்தி விற்பனை நிலையம் கிளிநொச்சியில்



கிளிநொச்சி, பெப். 05

திண்ம திரவ இயற்கை உர உற்பத்தி விற்பனை நிலையம் நேற்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி கல்மடுநகர் ரங்கன் குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் சிவகுமார், மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் செல்வராஜா, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன், கண்டவளை வைத்தியசாலை வைத்திய அதிகாரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த விற்பனை நிலையத்தில் விரைவு முறையில் உயர் போசனைமிகு கூட்டெரு தயாரித்தல் மற்றும் விற்பனை செய்யும் பல்வேறு விடயங்கள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## திரைத்துறை சார் பயிற்சி பட்டறை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், பெப். 05

திரைத் துறை சார்ந்த இருநாள் வதிவிட பயிற்சிப் பட்டறை நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.

தடம் அமைப்பின் ஏற்பாட்டில் ஆரம்பமாகியுள்ள இந்தப் பயிற்சிப் தேசிய ரீதியிலான குறும்பட போட்டியில் வெற்றிபெற்ற 37 குடும்படங்களில் தெரிவு செய்யப்பட்ட 6 குறும்பட தயாரிப்பு குழுக்கள் இந்தப் பயிற்சியில் பங்கேற்றன.

இதன் ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநக சபை முதல்வர் வி. மணிவண்ணன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கை நெறிகள் பிரிவின் தலைவர் கலாநிதி எஸ். ரகுராம் கௌரவ விருந்தினராக யாழ் மாவட்டத்திற்கான கலாச்சார உத்தியோகத்தர் ஆர். கிருஷ்ணகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

பயிற்சிநெறியின் பின்னர் பங்குபற்றிய குழுக்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு அதில் தரமான படைப்பை உருவாக்கும் இறுதி வெற்றிக்குரிய ஒரு குழு தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் இறுதிப்படைப்பை உருவாக்குவதற்காக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தொற்றாளர் எண்ணிக்கை 30 வீதத்தினால் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 05

நாட்டில் கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 30 சத வீதத்தினால் அதிகரித்துள்ளதாக கோவிட்-19 கட்டுப்படுத்தல் தொடர்பான இராஜாங்க அமைச்சின் இணைப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

மேலும், கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது தொற்றாளர் எண்ணிக்கை 30 வீதத்தாலும், மரணங்களின் எண் ணிக்கை 8 - 10 வீதத்தாலும், ஒட்சிசன் தேவையுடைய தொற்றாளர் எண்ணிக்கை 4 வீதத்தாலும் மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் படுவோர் எண்ணிக்கை 4 - 5 வீதத்தாலும் அதிகரித்துள்ளது.




## மரண அறிவித்தல்

தோற்றம்
07 - 08 - 1934



மறைவு
01 - 02 - 2022

### திருமதி தில்லையம்மா தங்கராசா

யாழ். வேலணை வடக்கு 5ம் வட்டாரம் சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும், கனடா Whitby ஐ வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்மா தங்கராசா கடந்த 01-02-2022 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நடராஜா – தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு – சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குழந்தைவேலு தங்கராசா (முன்னாள் சிங்கப்பூர் மெடல் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், வெலிகம்) அவர்களின் அன்பு மனைவியும், சௌந்தரராஜா(கனடா), மேகலா(கனடா), சற்குணராஜா(சுவிஸ்), ஜெயகலா(கனடா), ரூபகலா(கனடா), தர்மராஜா(கனடா), ஜீவகலா(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீசுசிகலா, ரமணி(சுவிஸ்), பாலமுரளி, அரியரட்ணம், நந்தினி, ஞானதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், இராமநாதன், சபாநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காந்திமதி (பிரான்ஸ்), காலஞ்சென்ற குணலக்சுமி(வேலணை), காலஞ்சென்ற செல்வநாயகம்(வேலணை), தியாகராஜா (கனடா), காலஞ்சென்ற ஆனந்தராஜா(கிளிநொச்சி), சிவராஜா(கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும், இந்திரபூபதி, நாகேஸ்வரி, வள்ளியம்மை, சுசீலாதேவி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், சுபேந்திரன், சுமதி, கங்கா, காலஞ்சென்ற யமுனா, ஞானதரன், வசிகரன், குமுதா, சுதாகரன், அமுதா ஆகியோரின் தாய் மாமியாரும், ராகுலன், ராகவி, ஆரணி, ஆரங்கன், ஆரன், அக்ஷயன், அஞ்சனா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும்,பிரணவி, பிரணவன், அருஷன், அஸ்வினா, அனோஜன், அனிஷ் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 05 Feb 2022 1:30 PM - 4:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

கிரியை :
Sunday, 06 Feb 2022 6:00 AM - 8:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

தகனம் :
Sunday, 06 Feb 2022 8:30 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சௌந்தன் - மகன்
Mobile : +14162943401

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**


6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார்
ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE- வீரம்
4.30 மணி : மனிதனின் மறுபக்கம்



5.00 மணி : அந்தி மந்தாரை
6.00 மணி : - எதுசரி எதுபிழை-இலங்கை இந்திய மீனவர்கள் பிரச்சினையின் பிண்ணனி



**இரவு**

7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
7.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: டான் பட்டிமன்றம்



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு